
# கலைஞர் சொன்ன கதைகள்



திமுக செயல் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களது 65வது பிறந்த நாளையொட்டி அவர் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவருக்கு அளித்து வரும் புத்தகங்களில் சில புத்தகங்கள் தங்கள் நூலகத்திற்கு வழங்கப்படுகிறது.

**தி.மு.க. தலைமைக் கழகம்,**

அண்ணா அறிவாலயம்,

சென்னை

# கலைஞர் சொன்ன கதைகள்

திமுக அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

டாக்டர் கலைஞர்
**மு. கருணாநிதி**

**பாரதி பதிப்பகம்**

*126/108, உஸ்மான் சாலை,*
*தி.நகர், சென்னை - 600 017.*
*த.எண் : 4984 தொலைபேசி : 24340205*


41619

க894-81132
கருணா

**விலை : ரூ.30.00**

❑ KALAIGNAR SONNA KATHAIGAL ❑ Collection of Short stories ❑ by : Dr. KALAIGNAR M. KARUNANIDHI ❑ First Edition : August 2004 ❑ Second Edition : December 2008 ❑ Price Rs. 30.00 ❑ ©TamizhkkaniPathippagam ❑ Published by : BHARATHI PATHIPPAGAM, 126 / 108, Usman Road, T.Nagar, Chennai - 600 017. ❑ P.B.No. : 4984 ❑ ☎ 24340205 ❑ Printed at : SIVAKAMI PRINTO GRAPHICS, 160 / 117, Big Street, Triplicane, Chennai - 600 005. ❑ ☎ 28445051 ❑

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



# கலைஞர் உரை

தேடிப் பார்த்து பார்த்து
[illegible] சேகரித்து
[illegible] போல
[illegible]
திரு. [illegible] அவர்கள்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible].

அன்புள்ள
[illegible]

# பதிப்புரை

எங்கள் பதிப்பக வளர்ச்சிக்கு திராவிட இயக்க முன்னோடிகளின் படைப்புகளும், அதேபோன்று திராவிட இயக்க முன்னோடிகளின் வளர்ச்சிக்கு எங்கள் பதிப்பகமும் உதவியாக அமைந்தது என்பதை எண்ணி நாங்கள் பெருமை கொள்கிறோம்.

அந்தப் பெருமைக்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் அவர்களின் படைப்புகள் எங்களுக்குப் பெரிதும் உதவி வருகின்றன. அதற்காக கலைஞர் அவர்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

பல சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளிலும், மேடைகளிலும் கலைஞர் அவர்கள் எடுத்து சொன்ன கதைகளை, அவற்றின் அருமை கருதி தொகுத்து வழங்குவதில் பெருமை அடைகிறோம். கலைஞரின் எழுத்துக்கள் என்றாலே தேனினும் இனியது என்று நாம் யாருக்கும் எடுத்து சொல்ல வேண்டியதில்லை. அந்த தேனிலே ஊறிய பலாச் சுளையின் சுவையை மிஞ்சும் அருமையுடையவை இந்தக் கதைகள் என்றால் மிகவும் பொருந்தும்.

இதை வெளியிட அனுமதி அளித்த கலைஞர் அவர்களுக்கும், தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கும், இதைத் தொகுத்து வழங்கிய மயிலாடுதுறை A.V.C. கல்லூரி பேராசிரியர் வன்மீக. வெங்கடாசலம் அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி!

**சித. இராஜேந்திரன்**

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | அப்படித்தான் சிரிப்பேன் | 7 |
| 2. | ஐஸ்கட்டி | 8 |
| 3. | தலையில் மலை | 9 |
| 4. | வெறும் கை முழம் போடும் | 14 |
| 5. | கூட்டணி | 15 |
| 6. | சீற வேண்டாமா? | 16 |
| 7. | கழுதையின் கதை | 17 |
| 8. | உனக்கு வயதென்ன? | 19 |
| 9. | தமிழன் என்று சொல்லடா! | 20 |
| 10. | கடமை கண்ணியம் கட்டுப்பாடு | 23 |
| 11. | சாவிதான் இல்லை | 25 |
| 12. | கண்ணில் கால் | 27 |
| 13. | மயில் ராவணன் | 28 |
| 14. | ஜாடி குட்டி போடுமா? | 30 |
| 15. | ஒண்ணு குடும்மா? | 31 |
| 16. | அத்திரி பாச்சா | 33 |
| 17. | செருப்போடு இரு | 34 |
| 18. | இடிக்குபின் மழை | 35 |
| 19. | நடக்குமா நடக்காதா? | 37 |
| 20. | கனியும் கணையும் | 40 |
| 21. | இதயம் பேசுகிறது | 41 |
| 22. | புலிவால் | 42 |
| 23. | தெரியாத பேச்சு | 43 |
| 24. | வெண்ணெய் உருகுது வெயிலில்! | 45 |
| 25. | மாமியார் உடைத்தால் மட்டும் மண்சட்டியா? | 52 |
| 26. | பொறுமைக்கு சான்று | 58 |
| 27. | எடுக்கவோ கோக்கவோ! | 59 |

| | | |
|---|---|---|
| 28. | அந்த நாள் வந்திலை... | 60 |
| 29. | பனித் துளியில் பனைமரம் | 62 |
| 30. | பாடுநர் போல... | 63 |
| 31. | இராமனைப் பற்றி இராமன் | 64 |
| 32. | மானும் பெருமானும் | 67 |
| 33. | எழுச்சிக்கு அடையாளம் | 69 |
| 34. | தலையும் நுனியும் | 70 |
| 35. | தும்... பம்... தீம்... தோம் | 71 |
| 36. | நல்வழியும் நல்ல வழியும் | 74 |
| 37. | நாக்குத் தமிழ் மணக்கும் | 75 |
| 38. | நீதி தேவதையே! | 77 |
| 39. | நன்றி சொல்லும் நேரம்... | 78 |
| 40. | பந்தலிலே பாகற்காய் | 79 |

# 1 அப்படித்தான் சிரிப்பேன்

ஒரு மன்னரும் இராணியும் மாளிகையின் பால் கனியிலே மந்தகாசமாக அமர்ந்து வேலைக்காரர் களை அழைத்து - பழங்கள் கொண்டு வரச் சொல்லி அதிலே அருமையான ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்து- அதை உரித்து இராணி இராஜாவுக்குத் தர - அந்த சுளைகளை - அவன் ஒன்று விழுங்கி விட்டு இன்னொரு சுளையை எடுத்து இராணிக்கு ஊட்டி விட - அப்போது - உரிக்கப்பட்ட அந்தப் பழத்தின் தோலை வெளியிலே தூக்கி எறிய - அப்போது தெருவிலே போன ஒரு பிச்சைக்காரன் அந்த ஆரஞ்சு பழத் தோலை எடுத்து கடிக்க - அதைப் பார்த்த இராணி கோபமடைந்து, "நாம் சாப்பிட்டு தூக்கியெறிந்த தோலை அவன் சாப்பிடுவதா? இது மாளிகையின் சொத்து என்றுகூட அவனுக்குத் தெரியாதா" என்று கோபிக்க, உடனே மன்னன் தன் னுடைய காவலனை விட்டு அந்தப் பிச்சைக் காரனை சவுக்கால் அடிக்கச் சொல்ல, காவலன் கீழே இறங்கி ஓடி "எப்படியடா மன்னர் சாப்பிட்ட பழத்தின் தோலை நீ சாப்பிடலாம்" என்று சவுக்கால் அடிக்க- அந்தப் பிச்சைக்காரன் அடியை வாங்கிக்கொண்டு கலகலவென சிரிக்க, மன்னனுக்கு ஆச்சரியம் ஏற் பட்டு-அவனே கீழே இறங்கி வந்து கேட்க, "ஆமாம்!

அப்படித்தான் சிரிப்பேன்!" என்று பிச்சைக்காரன் சொல்ல – "ஏன் சிரிக்கிறாய்?" என்று மன்னன்கேட்ட போது, பிச்சைக்காரன் சொன்னானாம்:

"அந்தப் பழத்தின் தோலை சாப்பிட்ட எனக்கே இவ்வளவு சவுக்கடிகள் என்றால், முழுப் பழத்தையும் சாப்பிட்ட உங்களுக்கு எவ்வளவு அடிகள் விழ வேண்டும் என்பதை எண்ணித்தான் சிரிக்கிறேன்" என்று மன்னனையும் ராணியையும் பார்த்து அந்தப் பிச்சைக்காரன் சொன்னானாம்.

*

## 2 ஐஸ் கட்டி

ஒரு அரசன் தன் அமைச்சர்களை அழைத்துக் கேட்டானாம். என்னப்பா! இவ்வளவு திட்டங்களைத் தீட்டி மக்களுக்காகப் பாடுபடுகிறோம். இது மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்கிறார்களே, என்ன காரணம்?'' என்று கேட்டானாம். ஒரு அமைச்சர் பதில் சொன்னார், வாயால் சொல்லவில்லை செய்கையால் சொன்னார்:

ஒரு ஐஸ்கட்டியை கொண்டு வரச் சொன்னார். அதனை அரசரின் கையிலே தரச் சொன்னார். அரசன் ஐஸ்கட்டியை வாங்கி வைத்துக் கொண்டு "என்ன செய்வது?" என்று கேட்டான். "ஒவ்வொரு அமைச்சர் கையிலும் வரிசையாகக் கொடுங்கள்" என்றான். அவ்வாறே வரிசையாக ஒவ்வொரு அமைச்சர் கையிலும் தரப்பட்டது. பிறகு பெரிய அதிகாரிகள், அடுத்து நடுநிலை அதிகாரிகள்,

அதற்கடுத்தபடியாக சின்ன அதிகாரிகள். இப்படி யாகப் போய் கடைசியாக இருக்கின்ற கடைநிலை ஊழியர் வரை அந்த ஐஸ் கட்டி போயிற்று. அரசன் கையிலே கொடுக்கப்பட்ட ஐஸ்கட்டி இப்படிப் பல பேர் கைமாறி கடைசியாக யார் பயன் பெற வேண்டுமோ அவன் கைக்குப் போய் சேரும்போது ஒரே ஒரு சொட்டு தண்ணீர் தான் மிஞ்சியது. இப்படித்தான் திட்டத்தின் பயனைப் பெறுபவன் கடைசியில் நிற் கிறான். அவனுக்குச் சேர வேண்டியது சேருவ தில்லை. (பலத்த கைதட்டல்) "அரசே! இப்படித்தான் நம்முடைய திட்டங்கள் எல்லாம் போய்ச் சேரு கின்றன" என்று அமைச்சர் சொன்னார். அப்படிப்பட்ட ஐஸ்கட்டிகளாக நம்முடைய திட்டங்களை யாரும் ஆக்கி விடக்கூடாது. அரசன் கையிலிருந்து நேரடி யாக மக்களுக்கு அது கிடைத்தாக வேண்டும். அரசு அறிவித்தவுடனே தூங்காமல் பார்த்துக் கொண் டிருப்பேன் என்பதையும் உங்களுக்கு நான் உறுதி யாக தெரிவித்துக் கொள்கிறேன்.

*

## 3 தலையில் மலை

"மலையொன்றைத் தலையில் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் பவனி வருவேன்! இது என்னுடைய முதல்திட்டம்! வானத்தை வில்லாக வளைத்து அந்த வில்லுக்கேற்ற நாணாக மணலைக் கயிறாகத் திரித்துக் காட்டுவேன்! இது என்னுடைய இரண்டாவது திட்டம்! அடுத்தடுத்து இன்னும் பல அற்புத திட்டங்களை வைத்திருக்கிறேன். அவற்றைப்

3

பின்னர் இந்த நாட்டு மக்களின் முன்னிலையில் நிறைவேற்றிக் காட்டுவேன்.

இவ்வாறு, பொதுமக்கள் மன்றத்தின் நடுவே தோள் தட்டி அறைகூவல் விடுத்தான் ஒரு வாலிபன். மக்கள், அவன் வார்த்தைகளை வாய் பிளந்தவாறு கேட்டு மயங்கிப் போயினர். இப்படி ஒரு வாலிபன் வீரம் பேசிக் கொண்டு திரிவது மன்னரின் காதுக்கும் எட்டியது. அவனைக் கொலுமண்டபத் திற்கு அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்தார். பீடுநடை போட்டுக் கொலுமண்டபத்தில் நுழைந்த வாலிபனை மன்னர் அலட்சியப்படுத்தாமல் அவன் மக்களிடம் அறிவித்த திட்டங்கள் சாத்தியமானவை தானா? என்று வினவினார்!

"இயலாதது என்று இவ்வுலகில் எதுவுமில்லை அரசே! நான் அறிவித்த திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றுவேன்" என்று, நிமிர்ந்து நின்று முழங்கினான் அந்த வாலிபன்.

"அப்படியானால், வீரமிக்க வாலிபனே! உன் முதல் திட்டத்தை என் எதிரில் செய்து காட்டுக! தயார் தானா?"

மன்னரின் இந்த ஆவல் ததும்பிய கேள்விக்கு அவன் மிக்க அமைதியாகப் பதில் அளித்தான்.

"மன்னர் மன்னவா? எதற்கும் சில வசதி வாய்ப்புகள் வேண்டுமன்றோ? நான் நாட்டு மக்க ளிடமும், தங்களின் திருமுன்னும் கூறிய செயல் களை நிறைவேற்றியே தீருவேன். ஆனால் ஒன்று! நான் நெடுநாட்கள் பயணம் செய்து களைத்துப் போயிருக்கிறேன். தங்களுக்கு விருப்பமிருந்தால் அரண்மனை விருந்தினனாக ஓரிரு மாதங்கள்

என்னை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். உடலில் வலிவு மிகுந்ததும், என்னுடைய முதல் திட்டமான மலையைத் தலையில் தூக்கும் காரியத்தைச் செய்து காட்டுகிறேன்" என்றான்.

மன்னர் மகிழ்ச்சியுடன் அவன் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். "ஓரிரு மாதங்கள் என்ன, மூன்று மாதங்கள் முழுமையான காலம் எடுத்துக் கொள்க! அந்த மூன்று மாத காலமும் அரண் மனையில் உனக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்" எனக் கூறி அவனைத் தட்டிக் கொடுத்தார்.

வாலிபனின் வீரச் செயல்களைக் காண, பொது மக்கள் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தனர்.

அவனுக்கு அரண்மனையில் உல்லாசமான வாழ்க்கை! உடலுக்கு வலிவு தரும் உணவு வகைகள்! உள்ளத்திற்குக் களிப்பூட்டும் பானங்கள்! கேட்டதெல்லாம் கிடைத்தது.

அவன் வெளியிட்ட திட்டங்களை நிறைவேற்றி விடுவானேயானால், அவனையே தனது படையின் தலைமைத் தளபதியாக நியமித்துக் கொள்ளப் போவதாக மன்னர், அமைச்சர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

மூன்று மாதங்கள் முடிவுற்றன. முதல் திட்ட மான, மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கும் திட்டம் நிறைவேற்றப் படுவதற்கான நாள் அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் மலையடிவாரத் தில் கூடியது. மன்னரும், அமைச்சர் பெருமக்களும், அரண்மனை அலுவலாளரும் தத்தமக்குரிய இடங்க ளில் அமர்ந்திருந்தனர். வாலிபன் வண்ண ரத

3

மொன்றில் வந்து இறங்கினான். அவன் மேனி புதுப்பொலிவுடனும் வலிவுடனும் விளங்கியது. மூன்று மாத கால அரண்மனை வாசத்தின் விளைவு அவன் உடற்கட்டில் நன்கு தெரிந்தது.

அவனைக் கண்ட மன்னரும், மக்களும் கையொலி செய்து வரவேற்றனர். முரசுகள் அதிர்ந் தன. இசைக் கருவிகள் ஒலித்தன. வாலிபன், தன் இரு கைகளையும் உயர்த்தினான். அனைத்து ஒலி களும் நின்று அமைதி நிலவிற்று. அவன், மலை யின் அடிவாரம் நோக்கிச் சென்றான். அனைவரது விழிகளும் இமைக்காமல், நடக்கப் போகும் நிகழ்ச்சியை உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

3

"நான் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்!" என்று கூவினான் அவன்! ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்!

ஆனால் நடந்தது என்ன? அவன் மலையைத் தூக்கவில்லை. திரும்பத் திரும்ப - "நான் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்" என்பதையே சொல்லிக் கொண்டிருந்தான். அந்தச் சொற்களையே கேட்டுக்கேட்டு அலுத்து விட்ட அனைவரும் அவனை நெருங்கிச் சென்றனர்.

"ஏன், அதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய்? செய்து காட்டு!" என்று மன்னர் உரத்த குரலில் கூறினார்.

"மன்னா, மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடப்பதாகத் தான் சொன்னேன். அதை மறந்து விடாதீர்கள். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இப்போதே இந்த மலையை என் தலையில் தூக்கி வையுங்கள். அதைத் தூக்கிக் கொண்டு நாடு

முழுவதும் நடக்கிறேனா, இல்லையா என்பதைப் பிறகு பாருங்கள்!"

என்று, மிக்க அடக்கமாக வாலிபன் விளக்கம் கூறினான்.

"இவனைக் கைது செய்யுங்கள்" என்று மன்னர் உறுமினார், சிறுத்தை போல!

"என்னை இனிமேல் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் ஒன்று! நான் என் நண்பர்களிடமும், மனைவியிடமும் செய்த சபதத்தை நிறைவேற்றி விட்டேன். அதாவது அரண்மனையில் முக்கியமான விருந்தினனாக ஒரு மாதமாவது இருந்து விட்டு வருகிறேன் என்று சபதம் செய்தேன். அது நிறைவேறிவிட்டது."

புன்முறுவல் முகத்தில் பூத்திட அந்த வாலிபன் அச்சமின்றிப் பதில் அளித்தான்.

"அடே! அப்படியொரு ஆசையிருந்தால், உன்னால் செய்ய முடிந்ததைச் சொல்லி அதற்குப் பரிசாக அரண்மனையில் தின்று தொலைத்திருக்கலாமே?" என்று மன்னர் கடிந்து கொண்டார்.

"செய்யக்கூடியதைச் சொன்னால் அப்படிச் சொல்கிறவனை யார் மதிக்கிறார்கள்? அரசே! அற்புதங்களைச் செய்து முடிப்பேன் என்று கூறினால் தான் ஆராதனைகள். அன்பான வரவேற்புகள், அத்தனையும் கிடைக்கின்றன!"

வாலிபனின் பதிலைக்கேட்ட மன்னர் வெகுண்டெழுந்து,

"ஓகோ! அதற்காகத்தான் எங்களை ஏமாற்றி னாயா?" என்று கர்சித்தார்.

"அரசர்க்கரசே! நான் இந்த நாட்டுக்குள் நுழையும் போதே இங்கு திருக்குறள் புழக்கத்தில் உள்ளதா? என்று விசாரித்தேன்! அரசரே அறியார் திருக்குறளை எனக் கேள்வியுற்றதும் என் முயற்சி யில் துணிவுடன் இறங்கினேன். திருக்குறளைப் படித்திருந்தால் தாங்களும் சரி, தங்கள் நாட்டு மக்களும் சரி, என் கூற்றினை ஒப்புக் கொண்டிருக்க மாட்டீர்கள்"

இப்படி வாலிபன் பதில் அளித்தான்.

"அப்படியென்ன இருக்கிறது அந்தக் குறளில்?"

இது மன்னரின் கேள்வி!

வாலிபன் கூறிய குறள் இதுதான்:

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

ஒரு செயலைச் செய்து முடிப்பேன் என்று வாயளவில் கூறிடுவது யார்க்கும் மிக எளிது! ஆனால் சொல்லியவாறு அச் செயலை முடிப்பது எளிதானதல்ல: அரிதானதாகும் - என்பதே இந்தக் குறளுக்குப் பொருள்.

*

# 4 வெறும் கை முழம் போடும்

இருபதாயிரம் வராகன் பொன் கொடுத்தால் இந்திரலோகத்து பட்டாடை கொண்டு வருகிறேன்" என்று தெனாலிராமன் அரசரிடம் சொன்னான்.

அவ்வாறே பொன் கொடுக்கப்பட்டது. நீண்டநாள் கழித்து தெனாலிராமன் அரசவைக்கு வந்தான். மன்னன் ஆவலுடன் "இந்திரலோகத்துப் பட்டு எங்கே?" என்று கேட்டான். "இதோ இருக்கிறது அரசே", என்று சொல்லிக் கொண்டே பட்டை விரித்து அளப்பது போல் வெறுங்கை கொண்டு அளந்த வாறு, ஒரு முழம், இரண்டு முழம் என்று சொல்லிக் கொண்டே இருந்தான். அரசன் திகைத்தான். அவையோர் திகைத்தனர். "இந்தப் பட்டு கற்புடைய மனைவியைப் பெற்ற கணவர்களின் கண்களுக்கு மட்டுமே தெரியும். அரசே, தங்கள் கண்களுக்குத் தெரிகிறதா?" என்று இராமன் கேட்டான். பாவம், அரசன்! என்ன சொல்ல முடியும்? அரசனை முந்திக் கொண்டு அவையோர் அனைவரும் ஒருமித்த குரலில் "எங்கள் கண்களுக்கு தெரிகிறது, தெரிகிறது, அற்புதமானப் பட்டு" என்றனர். அரசனும் 'ஆமாம், என் கண்ணுக்கும் நன்றாகத் தெரிகிறது" என்றான். வெறுங்கையால் முழம் போடுவதற்கு இப்படியொரு பழங்கதை உண்டு.

*

# 5 கூட்டணி

எலியும்-தவளையும் "நண்பர்களாக இருப்போம்" என்று பேசிக் கொண்டதாம். நண்பர்களாக நாம் ஒருவருக்கொருவர் பேசிப் பழகினால் மாத்திரம் போதாது; நம்முடைய நட்பை உலகத்திற்கு உணர்த்த இருவரும் நம்முடைய கால்களை கட்டிக் கொண்டே வாழவேண்டும்" என்று அவைகள்

தங்கள் கால்களை கட்டிக் கொண்டு ஊரெல்லாம் பவனி வந்ததாம்.

இப்படி பவனி வந்து கொண்டிருக்கும் போது ஒரு சின்னக் குட்டை. அந்தக் குட்டையைப் பார்த்ததும் தவளையின் புத்தி போகுமா? திடீரென்று தவளை குட்டையில் குதித்து விட்டது. எலிக்கு நீந்தத் தெரியாது. எலி தண்ணீரில் மிதந்தது. எவ்வளவு நேரம் மிதக்க முடியும்? மூழ்கிப் போய் எலி செத்தது. செத்துப் போன பிறகு அந்த நேரத்தில் வானத்தில் வட்டமிட்ட பருந்துவின் கண்களுக்கு குட்டையில் செத்து மிதக்கின்ற எலி தெரிந்தது. ஆகா! நல்ல தீனி கிடைத்தது என்று பருந்து ஒரே மூச்சாக கீழே பறந்து வந்து எலியை தூக்கிக் கொண்டு போனது. எலியைத் தூக்கிக் கொண்டு போகும்போது அதனோடு சேர்ந்து தவளையும் போனது. "நாம் நினைத்தது ஒரு இரை. கிடைத்ததோ இரண்டு இரை" என்று இரண்டையும் பருந்து சாப்பிட்டது.

*

## 6 சீற வேண்டாமா?

ஒரு முனிவரிடத்திலே நல்ல பாம்பு ஒன்று சென்று முறையிட்டுக் கொண்டதாம். "என்னைக் கண்டால் எல்லோரும் பயப்படுகிறார்கள். எனக்குப் பெயர் நல்ல பாம்பு என்று இருக்கிறது. ஆனாலும் என்னைக் கண்டு மக்கள் நடுங்குகிறார்கள். ஏன்?" என்று கேட்டதாம். முனிவர் சொன்னார். "நீ எல்லோரையும் கடித்து விடுகிறாய், நீ கடிக்கிற காரணத்தால் தான் நல்ல பாம்பு என்று பெயர்

இருந்தும் உன்னைக் கண்டு பயப்படுகிறார்கள். ஆகவே இனி நீ யாரையும் கடிக்காதே" என்று முனிவர் எடுத்துச் சொன்னார். பாம்பு போய் விட்டது. சில மாதங்கள் கழித்து அந்தப் பாம்பு முனிவரைக் காண வந்தது. பாம்பின் உடலெல்லாம் காயங்கள். "ஏன் இவ்வளவு காயப்பட்டு வந்திருக்கிறாய்?" என்று முனிவர் கேட்டார். பாம்பு சொன்னது "உங்கள் சொற்படி நான் யாரையும் கடிக்காமல் இருந்தேன். அதனால் என்னைப் பார்த்தவர்களெல்லாம் அடி அடியென்று அடித்தார்கள். அதனால் ஏற்பட்ட காயங்கள் தான் இவை" என்று கண்ணீர் வடித்தது. முனிவர் சொன்னாராம்: "உன்னைக் கடிக்கக் கூடாது என்றுதான் சொன்னேனே தவிர, ஒரு சீறு சீறி காட்டக்கூடாது என்றா சொன்னேன். கடிக்க வேண்டாம், அதற்காக உன்னை அடிக்க வந்தவர் களைப் பார்த்து ஒரு சீறு சீறி இருந்தால் உன்னை அடிக்காமல் இருந்திருப்பார்கள் அல்லவா, நீ கடிப்பதை மறந்து விடு. ஆனால் சீறுவதை மறந்து விடாதே" என்று முனிவர் சொன்னாராம்.

அதைப் போல நல்லவனாக இருக்கலாம். ஆனால் கோழைகளாக இருந்துவிடக் கூடாது. சாதுவாக இருக்கலாம்; பரம சாதுக்களாக இருந்துவிடக் கூடாது. தீமைகளைக் கண்டு பொங்குகின்ற இதயம் நிச்சய மாகத் தேவை.

*

## 7 கழுதையின் கதை

ஒரு அண்ணனும் தம்பியும் அவர்களுடைய தொழில் துறைக்கு ஒரு கழுதையை ஓட்டிக் கொண்டு போனார்கள். அவர்கள் சலவைத் தொழிலாளர்கள்.

7

போகும்போதே இரண்டு குறும்புக்காரர்கள் வேண்டுமென்றே அவர்கள் பின்னாலேயே போய்க் கொண்டு இருந்தார்கள். “ஏனய்யா இரண்டுபேரும் நடந்து போறீங்க. கழுதை சும்மாதானே போகிறது. மூத்தவனை உட்கார வைத்து இளையவன் கழுதையை ஓட்டிக் கொண்டு போகக் கூடாதா?" என்று கேட்டார்கள். உடனே மூத்தவனை கழுதை மேல் உட்கார வைத்துவிட்டு இளையவன் ஓட்டிக் கொண்டுபோனான். கொஞ்ச தூரம் போனவுடன் அந்தக் குறும்புக்காரர்கள் மீண்டும் அவர்களைப் பார்த்து “மூத்தவனாக இருக்கிறாயே உனக்கு இரக்கம் இருக்கா? இளையவனை நடக்க வைத்து விட்டு மூத்தவன் கழுதையில் அமர்ந்து போகலாமா?" என்று கேட்டார்கள். உடனே இவர்கள் “அப்படியா" என்று கேட்டு விட்டு, மூத்தவன் இறங்கிக் கொண்டு இளையவனை உட்கார வைத்துப் போனார்கள்.

கொஞ்ச தூரம் போனதும் குறும்பர்கள், மீண்டும் இவர்களைப் பார்த்து, “கழுதையினுடைய முதுகிலேதான் அதிகமாக இடம் இருக்கே! இரண்டு பேருமே ஏறிக் கொண்டு போகக்கூடாதா?" என்று கேட்டார்கள். “சரி” என்று இருவரும் கழுதை மீது ஏறிக் கொண்டு போனார்கள். கழுதை துணியைத் தான் சுமக்கும். இவர்களைச் சுமக்க முடியுமா? சுமக்க முடியாமல் படுத்து விட்டது.

உடனே குறும்புக்காரர்கள் “இதுவரை உங்களை கழுதை தூக்கிக் கொண்டு வந்தது. இனிமேல் நீங்கள் கழுதையை தூக்கிக் கொண்டு போங்கள்" என்று சொன்னார்களாம்.

உடனே அந்த இருவரும் கழுதையின் காலிலே ஒரு கம்பைக் கட்டி அதைத் தூக்கித் தோளிலே

வைத்துக் கொண்டு போனார்கள். வழியிலே ஒரு பாலம் குறுக்கிட்டது. ஆற்றில் நிறையவே தண்ணீர் போய்க் கொண்டிருந்தது. கழுதையை தலைகீழாக கட்டி தூக்கிக் கொண்டு அந்தப் பாலத்திலே நடந்து போனார்கள். கழுதை சும்மா இருக்குமா? ஒரு துள்ளு துள்ளி ஆற்றிலே விழுந்தது. கடைசியில் கழுதையை இழந்தது தான் கண்ட பலன். அதுபோல போகிறவன் பேச்சையெல்லாம் கேட்டால் கழுதையை இழந்த கதைதான் நடக்கும்.

*

## 8

## உனக்கு வயதென்ன?

90 வயது கிழவன் ஒருவன் தோட்டத்திற்குள்ளே குழிதோண்டி ஒரு மாங்கொட்டையைப் புதைக்கும் போது, "என்ன கிழவா? உனக்கு வயதென்ன? இன்னும் இரண்டாண்டோ, ஐந்தாண்டோ? இருக்கப் போகிறாய், இந்த மாங்கொட்டையைப் புதைக் கிறாயே, என்றைக்கு இது செடியாகி, மரமாகி, கிளை விடுத்து, இலை தழைத்து, பூவாகி, காயாகி, கனி யாகி, அந்தப் பழத்தை நீ சாப்பிடப் போகிறாய்?" என்று சிலர் கேட்டனராம். அப்போது அந்த கிழவன், "இப்படி என் தாத்தா எண்ணியிருந்தால் நான் அந்த மாமரத்தின் பழத்தினை சாப்பிட்டிருக்க முடியாது. எனவே எதிர்காலத்திலே என்னுடைய பேரன் பேத்திக்காக, என்னுடைய சந்ததிக்காக இதைச் செய்கிறேன்" என்று சொன்னானாம்.

அதைப்போல நாம், என்றைக்கு இந்தியாவில் இருக்கிற தேசிய மொழிகளெல்லாம் ஆட்சி மொழி

ஆவது? அது வரையில் நாம் என்ன உயிரோடு இருக்கப் போகிறோமா? என்று கருதிச் சும்மா இருந்தால் பொது வாழ்விற்கே தகுதியற்றவர்களாகி விடுவோம்.

*

# 9 தமிழன் என்று சொல்லடா!

தமிழ் இயக்கத்தின்பால் தன்னுடைய உள்ளத்தை பறிகொடுத்தவர் சுகி சுப்ரமணியம் அவர்கள். தமிழனுடைய சுய மரியாதையை என்றென்றும் விட மறுத்தவர். அத்தகைய உழைப்பாளி. திருச்சி வானொலி நிலையத்திலும், தொடர்ந்து சென்னை வானொலி நிலையத்திலும், நடிகராக, நாடக ஆசிரிய ராக, திறமைமிக்க எழுத்தாளராக, பல நடிகர்களை, எழுத்தாளர்களை உருவாக்கக் கூடியவராக வாழ்ந்தவர் அவர்.

அவருடைய குடும்பமே எழுத்தாளர் குடும்பம். அவரது துணைவியார், அவருடைய மகள், மகன்கள், அவருடைய மருமகள் அத்தனை பேரும் எழுத்தாளர்களாக இருக்கின்றார்கள்.

அந்தக் குடும்பத்துத் தொகுப்பு நூலில் முதல் கட்டுரைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பே 'தமிழன் என்று சொல்லடா' (தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா! என்று சொல்லிக் கொண்டு தான் இருக்கிறோம். நிற்கிறானோ இல்லையோ) தலை நிமிர்ந்து நில்லடா என்று சொல்லாமல், அந்தக் கட்டுரைக்குத் தலைப்பு

தமிழன் என்று சொல்லடா என்பதோடு முடித் திருக்கிறார் போலும்.

அதில் ஒரு சிறுகதை. வெள்ளையன் காலம். அந்த வெள்ளையன் காலத்தில் ஸ்டோன் என்கிற ஒரு நீதிபதி. மற்றும் ஒரு குமாஸ்தா. அவர் பெயர் குமரகுருபரர். வெள்ளை நீதிபதி தமிழ்நாட்டிலே தன்னுடைய பணியை ஆற்ற வேண்டிய காரணத் தால் தமிழ்க் கற்க விரும்புகிறார். இது அவருக்கு அவசியமேற்பட்டது அப்போது! எனவே தமிழ் கற்றார். குமாஸ்தாவாக இருந்த குமரகுருபரரை தனக்கு தமிழ் ஆசிரியராக ஏற்றுக் கொண்டார். தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுக்க நீதிபதியின் வீட்டிற்கு குமாஸ்தா செல்லும் போதெல்லாம் நீதிபதி எழுந்து நின்று வரவேற்று உபசரித்து சமமாக நாற்காலிகளைப் போட்டு அவர் எந்த அளவிற்கு பணிவோடு பாடம் கற்க வேண்டுமோ அப்படி பாடம் கற்கின்ற மாணவராக அந்த குமாஸ்தாவிடம் நீதிபதி ஸ்டோன் நடந்து கொண்டார்.

நீதிபதி ஒரு குமாஸ்தாவிடத்திலே இவ்வளவு பணிவாக நடக்கிறார் என்றால், தமிழுக்கு கிடைத்த பெருமையல்லவா என்று அவர் மனம் களித்தார். உவகை கொண்டார். ஒருநாள் இந்தப் பாடம் சொல்லித் தரும் காட்சியை ஒரு டெப்டி கலெக்டர் பார்த்தார். அவர் தமிழர். பெயர் சாம்பசிவம்.

அவருக்கு ஒரே எரிச்சல். நீதிபதி இவ்வளவு பணிவாக பாடம் கேட்கிறார். சமமாக இந்த குமாஸ்தாவும் இந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்கிறார் என்ற பொறாமை அத்தமிழருக்கு ஏற்பட்டது. வெள்ளைக் காரன் தமிழுக்குப் பணிந்தான். தமிழனுக்குப்

9

பொறாமை. ஐயோ, தமிழனுக்குப் பணிந்து உட்கார்ந்திருக்கிறானே, என்கிற பொறாமை. எனவே அந்த டெப்டி கலெக்டர் சாம்பசிவம் தனியாக நீதிபதியை சந்தித்து, "இது நல்லதல்ல. அவரோ சாதாரண எளிய குமாஸ்தா. நீங்களோ பெருமைக்குரிய மாண்புமிகு நீதிபதி, அவர் முன்னால் நீங்கள் இவ்வளவு பணிவோடு பாடம் கற்பது தகாது. முறையல்ல" என்றார்.

9

இதை நீதிபதி கேட்டுக் கொண்டார். மறுநாள் பாடம் சொல்ல குமரகுருபரர் வீட்டிற்கு வருகிறார். நீதிபதி நாற்காலியில் அமர்ந்து கொண்டு குமரகுருபரரை நிற்கச் சொல்லி பாடம் கற்பிக்கச் சொல்லுகிறார். குமரகுருபரர், "நாற்காலி எங்கே?" என்று கேட்கிறார். "நாற்காலி கிடையாது. நீ சாதாரண குமாஸ்தா. நான் நீதிபதி. நான் உட்கார்ந்து கொண்டு பாடம் கேட்கிறேன். நீ நின்று கொண்டு பாடம் சொல்" என்றார். உடனே குமரகுருபரர் சொல்லுகிறார் "நான் குமாஸ்தாவாக இருக்கலாம். ஆனால் தமிழ் கற்ற ஆசிரியன், தமிழன், நான் உட்காராமல் பாடம் சொல்லித் தர முடியாது" என்று வெளியேறி விடுகிறார்.

வெளியேறிய பிறகு நீதிபதியின் மனைவி என்ன நடந்தது என்று கேட்கிறார். இவர் சொல்லுகிறார். "இப்படி டெப்டி கலெக்டர் சொன்னார். அதைக் கேட்டு நான் நாற்காலி தர மறுத்தேன். எனவே தமிழ் ஆசிரியர் - குமாஸ்தா கோபித்துக் கொண்டு போய் விட்டார்" என்று சொன்னார். உடனே அவரது துணைவியார், "இது குமாஸ்தாவிற்குக் கிடைத்த பெருமையில்லை. தனக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டும் என்கிற துணிவோடு அவர் தன்னுடைய தாய் மொழி; தமிழுக்கு பெருமை அளிக்கிற

காரணத்தால், நீங்கள் அவருக்கு பணிந்தே தீர வேண்டும். இதுதான் நம்முடைய பண்பாடு" என்று அந்த அம்மையார் சொல்லுகிறார்.

உடனே நீதிபதி காரில் ஏறி குமாஸ்தாவின் வீட்டிற்குச் சென்று, அவரது காலில் விழுந்து "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று மன்னிப்புக் கேட்கிறார். அப்போது தமிழன் என்று சொல்லடா.. தலைநிமிர்ந்து நில்லடா... என்று அந்த குமாஸ்தா தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டதாக சுகி சுப்ரமணியம் அந்தக் கதையை முடிக்கிறார்.

*

# கடமை கண்ணியம் கட்டுப்பாடு

10

பாளையங்கோட்டையில் நான் அடைப்பட்டுக் கிடந்த சிறைப்பகுதி 'குவாரன்டைன்' என்று அழைக்கப்படுவதாகும். இளங் குற்றவாளிகள் பள்ளிக்கு வெளியேதான் அது அமைந்துள்ளது. அங்கே நாற்பது அறைகள் உள்ளன. அவற்றில் ஒன்று எனக்காக ஒதுக்கப்பட்டது. மற்ற முப்பத்தொன்பது முழுமையாக நிரம்பி வழிந்தது. தனிமை - வெறுமை, மனிதர்கள் அல்லர்!

காலையில் விழித்ததும் கண்ணிலே படுவது புளிய மரம் - களை இழந்த இலையுதிர்ந்த புளிய மரம்!

உடனே கயத்தாற்றில் கட்டபொம்மன் தூக்கி லிடப்பட்ட அந்தப் புளியமரமும் என் கண்ணுக்குப் படும்; புறக்கண்ணுக்கு அல்ல - அகக்கண்ணுக்கு!

10

செங்கதிரோனின் தங்கக் கதிர்கள் - கரங்கள் - தழுவி எடுக்கும் பூமிக்குழந்தையை அந்த வெளிச் சத்தின் சாயல் மெல்லப் படர்ந்து வரும். நான் இருக்கும் வெறிச்சோடிய பகுதியிலும்

பின்னரே நான் வெளியே வரும்பொருட்டுக் கதவைத் திறந்து விடுவார்கள். சிறைக் கதவை அல்ல - அறைக் கதவை!

சின்னஞ்சிறு கூட்டிலிருந்து சற்றுப் பெரிய கூண்டுக்கு வந்து விட்ட உணர்வே மேலோங்கி நிற்கும்.

பகலிலோ வேக வைக்கும் வெயில்; வேகமாகப் போக மறுக்கும் பொழுது அதனால் உடல் புழுங்கும்; உள்ளமும் புழுங்கும்.

இரவு ஒன்பது மணிக்கு மறுபடியும் அறைக் கதவைப் பூட்டி விடுவார்கள்; என்னை உள்ளே வைத்துத்தான்!

பசுந்தளிர்ப் பருவத்தில் எத்தனையோ வேடிக் கையான விடுகதைகள் போட்டு மகிழ்வது எனக்கு வாடிக்கை.

"அத்துவான காட்டில் சொக்கன் பந்தடிக்கிறான்' - என்பதும் அவற்றிலே ஒன்று. ஒருநாள் அந்தச் 'சொக்கன்' என் பக்கமும் பந்தடிக்க வந்து விட்டான்! ஆம்; அணில் ஒன்று நான் இருந்த சிறைக் கோட்டம் வந்து சேர்ந்தது! மனித முகம் காணாமல் மனந்தவித்துப் புழுங்கிய நான், அணில் முகத்தைக் கண்டதுமே அகங்குளிர்ந்தேன்; முகம் மலர்ந்தேன்; ஆறுதலும்மிக அடைந்தேன் அதனைக் கனிவோடு கையில் எடுத்து அறையிலே உள்ள கப்-போர்டில் படுக்க வைத்தேன்.

ஆனால் பாவம். அதுவும் என்னைப் போல் ஒரு நோயாளி! காக்கையோ, குருவியோ கொத்தியதால்

அதன் உடலில் காயம்; என்னைப் போல் உள்ளத்தில் அல்ல! காரணம் அதற்கு அரசியல் தெரியாதே!

அதன் வேதனைக்கு மருந்து போட்டேன். தின்னப் பழம் கொடுத்தேன். ஆயினும் 'விடுதலை'யை விட வேறெதுவும் அதற்குப் பிடிக்கவில்லை. அந்த விஷயத்தில் நானும் திரு பக்தவத்சலமாக விரும்பிட வில்லை. எனக்கு இருதயம் இருந்து தொலைக்கிறதே! அதனால் அந்த அணிலை விடுவித்துத் தோட்டத்துப் பக்கம் அனுப்பி விட்டேன்.

அணில் என்னைப் பிரிந்து சென்று விட்டது. நான் அதனைப் பிரிந்து விட்டேன். அதற்கு என்னைப் பற்றி நினைவிருக்காது. அதன் நோய்க்கு அளித்த மருந்தோ, வாய்க்கு அளித்த கனிகளோ அதன் ஞாபகத்திற்கு வரப் போவதில்லை. ஆனால் பிரிந்திட்ட அணிலின் முதுகில் உள்ள மூன்று கோடுகள் மட்டும்.

கடமை
கண்ணியம்
கட்டுப்பாடு

என்னும் மூன்று சொற்களாக என் உள்ளத்தில் முழங்கிக் கொண்டிருக்கும். நான் எங்கிருந்தாலும் அந்த முழக்கம் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

*

# சாவி தான் இல்லை 11

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கூடாது என்பது தான் காங்கிரசாரின் எண்ணம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இருந்தால்தான் மாநில

11

மக்களுக்கு நன்மைகளைச் செய்ய முடியும் என்பது தான் நம்முடைய சித்தாந்தம்.

இங்கே ஒரு கதை சொல்ல வேண்டுமானால், ஒரு வீட்டு வாசலில் அந்த வீட்டு மருமகள் முழங் காலை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். பகல் ஒரு மணி வரை அவள் சமைக்காததைக் கண்டு, பக்கத்து வீட்டுக்காரி வந்து, 'சமைக்க வில்லையா?' என்று கேட்கிறாள். இவள் 'இல்லை' என்கிறாள். 'ஏன் விறகு இல்லையா?' என்கிறாள். 'விறகு இருக்கிறது' என்கிறாள். பிறகு, 'தீப்பெட்டி இல்லையா?' என்கி றாள். 'அதுவும் இருக்கிறது' என்று மருமகள் சொல்கி றாள். 'அரிசி கிடையாதா?' என்று கேட்கிறாள் பக்கத்து வீட்டுக்காரி. 'காய்கறி தேவையா?' என்றும் அவள் கேட்கிறாள். 'எல்லாம் இருக்கிறது' என்கிறாள். 'பிறகு ஏன் சமைக்கவில்லை' என்று பக்கத்து வீட்டுக்காரி கேட்க, "எல்லாம் இருக்கிறது. எல்லாவற்றையும் அறைக்குள் வைத்துப் பூட்டி விட்டு மாமியார் சாவியை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு வெளியே போய்விட்டார்!" என்று மருமகள் சொன் னாள்.

அதைப் போலத்தான் நாட்டிலே எல்லாமே இருக்கிறது. அணை கட்ட, நீர்ப்பாசன வசதிகள் செய்ய, தொழிற்சாலைகள் உருவாக்க எல்லா வசதிகளுக்கும் தமிழ்நாட்டில் இருக்கிறது. ஆனால் அவைகளை செய்ய அதிகாரம் மாத்திரம் நமக்குக் கிடையாது. அது மத்திய அரசின் கையிலே இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பிடுங்கி மாநில மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று பாடுபடுகிற இயக்கம் தான் திராவிட இயக்கம்.

*

# கண்ணில் கால்

## 12

கண்ணப்ப நாயனாருடைய இயற்பெயர் திண்ணன். திண்ணன் என்ற வேடன் தான் கண் ணப்பராக மாறினான். வழக்கமாக காட்டில் ஒரு சிவலிங்கத்தை பூஜை செய்து வந்தான். அந்தப் பூஜை கூட காய்கறி வைத்து நடத்திய பூஜை அல்ல. நம்முடைய மதுரை அடிகளார் அவர்கள் எந்த உணவை இப்போது தொடவும் மறுப்பாரோ, அந்த அசைவ உணவைத்தான் கண்ணப்ப நாயனார் படைத்து நாள்தோறும் வழிபட்டார்.

ஒருநாள் அந்த சிவலிங்கத்தின் கண்ணில் இரத் தம் வழிந்தது. அதற்கு சிகிச்சை செய்ய ஏதேதோ மூலிகைகளையெல்லாம் முயன்று பார்த்தும் முடிய வில்லை. பிறகு தன் கண்ணை ஒரு அம்பால் பெயர்த்து சிவலிங்கத்தின் கண்ணிலே அப்பினான். அப்படி கண்ணை அப்பிய காரணத்தால் தான் கண் அப்பியவன் - கண்ணப்பன் ஆனார்.

இவைகளையெல்லாம் நம்முடைய அடிகளாரே சொல்லியிருக்க வேண்டும். நானே அடிகளாராக மாறி உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் அந்த சிவலிங்கம், ஒரு கண்ணை அப்பி விட்டாரே, ஆளுக்கு ஒரு கண்ணாக இருந்து விட்டுப் போகட் டும் என்று நினைக்காமல் அவரை சோதிக்க வேண்டி இன்னொரு கண்ணிலிருந்தும் இரத்தம் வருமாறு செய்தார். உடனே வேறு வழியில்லாமல் தன்னுடைய இரண்டாவது கண்ணையும் பிடுங்கி, சிவலிங்கத்திற்கு வைக்க முற்பட்ட கண்ணப்பன், அந்தக் கண்ணையும் பிடுங்கி விட்டால் எங்கே

வைப்பது என்று தெரியாது என்பதற்காக அடை யாளத்திற்காக சிவனுடைய பழுதுபட்ட அந்தக் கண்ணில் தனது செருப்பணிந்த காலை வைத்துக் கொண்டு மற்றொரு கண்ணைப் பிடுங்கி அப்பினான் என்பது புராணக் கதை. அவன் தான் 63 நாயன் மார்களில் ஒருவனாக ஆனான். அதற்காக ஆண்ட வன் மகிழச்சியடைந்து இரு கண்ணிலும் அவனுக்கு ஒளிதந்தான் என்று புராணம் முற்றுப் பெறுகிறது.

*

# 13 மயில் ராவணன்

உசேனை கழகத்தினுடைய கூடுதல் அமைப்புச் செயலாளராக நியமித்தோம் என்பதை பொருளாளர் வீராசாமி இங்கே குறிப்பிட்டார். என்றைக்கும் அவர் ஊடுதல் செயலாளராக இருக்க மாட்டார் என்பதால் தான் அவரை கூடுதல் செயலாளர் என்கிற பொறுப் பிலே நாம் நியமித்திருக்கிறோம். இந்த இயக் கத்திற்கு எத்தனையோ சோதனைகள், வேதனை கள் எல்லாம் வருகிற நேரத்தில் இது எப்படி கட்டிக் காக்கப்படுகிறது. சோதனைகளை எல்லாம் இந்த இயக்கம் எப்படி சந்தித்து மீண்டும் வீறு கொண் டெழுகிறது என்கின்ற ஐயப்பாடு பல அரசியல் கட்சிகளிலே உள்ளவர்களுக்கெல்லாம் உண்டு. அதிலும் குறிப்பாக இந்த இயக்கத்தை வழி நடத்திச் செல்கின்ற நிலையில் ஆணையிடப் பட்டிருக்கின்ற என்னால் இவ்வளவு பெரிய சோதனைகள், வேதனைகள், சூறாவளிகள், புயல்கள், பூகம்பங்கள் இவைகளுக்குப் பிறகும் எப்படி நிமிர்ந்து நிற்க

முடிகிறது என்கின்ற வியப்பு உண்டு. பல கட்சிக் காரர்களுக்கும் பொதுமக்களிலே பலருக்கும் கூட உண்டு.

நான் அவர்களுக்கெல்லாம் ஒன்றை சொல்லிக் கொள்ள வேண்டுமேயானால் மயில் ராவணன் கதையில் மயில் ராவணனைப் பிடிப்பதற்கு முப்பத்து முக்கோடி தேவர்களாலும் முடியவில்லை. அவர்கள் முறையிட்டு அழைத்து வந்த மும்மூர்த்திகளாலும் இயலவில்லை. அப்பொழுது மயில் ராவண னுடைய வீழ்ச்சிக்கு என்ன வழி என்று அவர்கள் யோசித்த நேரத்தில் இறுதியாகக் கண்டுபிடித்தார்கள்.

பாதாள உலகத்தில் ஒரு பளிங்குமண்டபம் இருக்கிறது. அங்கே நீரோடை ஒன்று இருக்கிறது. அந்த நீரோடைக்குள்ளே குதித்து தண்ணீருக்குள் மூழ்கிச் சென்றால் அங்கே ஒரு தாமரைத் தண்டு இருக்கிறது. அந்த தாமரைத் தண்டின் வழியாக உள்ளே சென்றால் ஒரு பெரிய குகை இருக்கிறது. அந்த குகைக்குள்ளே சென்றால் அங்கே ஒரு பெரிய தங்கத்தாலான மாடம் இருக்கிறது. அந்த மாடத்திற் குள்ளே ஒரு பேழை இருக்கிறது. அந்த பேழைக் குள்ளே ஒரு வண்டு இருக்கிறது. அந்த வண்டை எடுத்து நசுக்கினால் மயில் ராவணனை வீழ்த்தலாம் என்பது புராணம். அப்படி உள்ள வண்டு தான் உசேன் (பலத்த கைதட்டல்)

உசேனைப் போன்றவர்கள் இந்த இயக்கத்திலே அத்தகைய வண்டுகளாய் இருக்கிற காரணத்தால் மயில்ராவணனாகிய என்னை, நான் தலைமை ஏற்று நடத்துகின்ற இந்த இயக்கத்தை யாரும் வீழ்த்த முடியவில்லை (பலத்த கைதட்டல்)

*

13

# 14 ஜாடி குட்டி போடுமா?

பக்கத்து பக்கத்தில் இரண்டு வீட்டுக்காரர்கள். ஒருவன் கொஞ்சம் புத்திசாலி... ஒருவன் புத்திசாலி என்றால் இன்னொருவன்... என்று சொல்வதோடு நிறுத்திக் கொள்ளலாம். இந்த புத்திசாலி, பக்கத்திலே உள்ளவனிடம் ஒரு நாள் "என் வீட்டிற்கு விருந்தினர் கள் வருகிறார்கள். அவர்களுக்கு தேநீர் தருவதற்கு என் வீட்டிலே ஒரு ஜாடி கூட இல்லை. எனவே உன் வீட்டிலே இருக்கின்ற பீங்கான் ஜாடியை இரவலாகக் கொடு" என்று கேட்டானாம்.

உடனே அவனும் தயக்கமில்லாமல் பீங்கான் ஜாடியை இரவலாகக் கொடுத்தானாம். வாங்கி வந்தவன் அந்த பீங்கான் ஜாடியை இரண்டு வாரம் வரையிலே திருப்பித் தரவில்லை. இரண்டு வாரம் கழித்து அந்தப் பீங்கான் ஜாடியோடு இன்னும் இரண்டு சிறிய குட்டி ஜாடிகளை சேர்த்து எடுத்துக் கொண்டு செல்கிறான். கொடுத்தவன் கேட்கிறான்: "நான் ஒரு பீங்கான் ஜாடி தானே கொடுத்தேன். இதனோடு சேர்த்து இரண்டு குட்டி ஜாடிகளைக் கொண்டு வந்திருக்கிறாயே" என்று கேட்கிறான்.

அதற்கு இவன் சொன்னான் "நீ கொடுத்தாயே பீங்கான் ஜாடி - அதை நான் இரண்டு வாரமாகக் கொண்டு வராததற்குக் காரணமே, அது கர்ப்பமுற்று இந்த இரண்டு பீங்கான் குட்டி ஜாடிகளை பிரச வித்ததுதான்" என்று சொன்னானாம். "அப்படியா! என்று ஆசையோடு அதையும் சேர்த்து அவன் வாங்கி வைத்துக் கொண்டான்.

மறுபடியும் ஒரு மாதம் கழித்து இதே மனிதன் - ஜாடியை இரவல் வாங்கியவன், இரவல் கொடுத்த

வன் வீட்டிற்குச் சென்று, "வீட்டிற்கு விருந்தினர்கள் வருகிறார்கள் ஜாடி கொடு'' என்று கேட்டான். அவனுக்குப் பேராசை. பீங்கான் ஜாடி கொடுத்தால், பீங்கான் குட்டிகள் தான் போடும். எனவே வெள்ளி ஜாடியே கொடுப்போம், வெள்ளி குட்டிகள் போடும் (சிரிப்பு) என்று வெள்ளி ஜாடியை கொடுக்கிறான். வாங்கிக் கொண்டு போனவன், பிறகு ஆளே வரவில்லை. ஓரிரு மாதங்கள் ஆயிற்று. ஒரு நாள் வழியிலே அவனைப் பார்த்து "என்னவாயிற்று வெள்ளி ஜாடி?" என்று கேட்டான். அதற்கு அவன் "கர்ப்பமுற்றிருக்கின்றது" என்றான். சில நாட்கள் கழித்து ஒரு நாள் அவனே வந்தான். "என்னப்பா கர்ப்பமுற்றிருக்கிறது எனறு சொன்னாயே, என்ன ஆயிற்று'' என்று கேட்டான். அதற்கு அந்தப் புத்திசாலி "பிரசவத்திலே ஜாடி செத்துப் போய் விட்டது" (பலத்த சிரிப்பு) என்று சொன்னான்.

உடனே அவன் திருப்பி "ஜாடியாவது கர்ப்ப மடைவதாவது? பிரசவிப்பதாவது? என்னடா? யாரை ஏமாற்றுகிறாய்?" என்று கேட்டானாம்.

ஆதாயம் கிடைத்தபோது கேள்வி கேட்கத் தோன்றவில்லை இழப்பு ஏற்படும் போதுதான் ஏன்? எப்படி? என்று கேள்வி கேட்கத் தோன்றுகிறது. இது மனித இயல்பாக ஆகிவிட்ட ஒன்று.

*

## ஒன்னு குடும்மா 15

கலைவாணரும், உடுமலை நாராயண கவியும் இணைந்து தமிழகத்தில் ஒரு கருத்துப் புரட்சியை உண்டாக்கினார்கள்.

15

அந்தக் காலத்து 'உத்தமபுத்திரன்' படத்தில் கலைவாணர் அய்யராக வருவார். அவர் காத லிப்பதோ - புல்கட்டு சுமக்கும் ஆதிதிராவிடப் பெண்ணை! அதனால் பல தகராறுகள் ஏற்பட்டு கடைசியில் அந்தப் பெண்ணையே உயர் ஜாதிக் காரனுக்குக் கட்டி வைக்கும் சூழ்நிலையை ஏற் படுத்திக் காட்டுவார் அந்தப் படத்தில்!

இன்றைக்கு சமூக சீர்திருத்தம் எளிதாகப் பேசி விடலாம்; ஆனால் அன்றைக்கு இத்தகைய காட்சி களைத் துணிந்து இணைத்தவர் கலைவாணர்!

அவரது அருமையான நகைச்சுவைக்கு இன் னொரு எடுத்துக் காட்டு.

தந்தை வெளியில்! மகளோ அறையில்! அவளை அடைய நினைக்கும் வாலிபன் (கலைவாணர்) இடையில்!

"உள்ளே போய் உங்கள் மகளிடம் மாங்கனி பெற்றுக் கொள்கிறேன்" என்பார் கலைவாணர்.

"சரி" - என்று தந்தை கூறிவிட்டு - உள்ளே இருக் கும் மகளிடம் "இந்தாம்மா, இவன் வருவான், ஒண்ணு கொடுத்திடு" என்பார்.

கலைவாணர் உள்ளே சென்று அந்தப் பெண் ணிடம் ஒரு முத்தம் கேட்பார்! அவள் மறுப்பாள்!

உடனே கலைவாணர் வெளியே எட்டிப் பார்த்து "கொடுக்க மாட்டேன் என்கிறாள், உங்கள் மகள்" என்பார்.

தந்தையோ "ஒண்ணு குடும்மா!" என்பார், கலைவாணர் முத்தம் பெற்றுக் கொள்வார்.

எப்படிப்பட்ட நகைச்சுவை? இப்படிப்பட்ட நகைச் சுவை கலைவாணர் ஒருவரின் சிந்தனையில் தான் வரும்.

*

## அத்திரி பாச்சா 16

பையன் ஒருவன் பக்கத்து ஊர் பாட்டி வீட்டுக்குச் சென்றிருந்தான். அங்கே பாட்டி கொழுக்கட்டை சுட்டுக் கொடுத்தாள். அதை சுவைத்துத் தின்ற பேரன், "இதுக்குப் பேர் என்ன பாட்டி?" என்று ஆவலுடன் கேட்டான். 'இதுதான் கொழுக்கட்டை' என்றாள் பாட்டி. "நான் ஊருக்குப் போனதும் அம்மாவிடம் சொல்லி எங்கள் வீட்டிலும் இதை செய்யச் சொல்லப் போகிறேன்" என்று கூறிய பேரன்; தனக்கு அடிக்கடி ஞாபகமறதி ஏற்படும் என்பதற்காக, 'கொழுக்கட்டை' 'கொழுக்கட்டை' என்று மந்திரம் உச்சரிப்பது போல உச்சரித்துக் கொண்டே ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்தான்.

"கொழுக்கட்டை! கொழுக்கொட்டை!" என்று முணு முணுத்துக் கொண்டே வந்தவனின் முன்னே, வழியில் ஒரு சிறிய வாய்க்கால் - அதை ஒரே தாண்டாகத் தாண்டினான். அப்படித் தாண்டும்போது 'அத்திரிப் பாச்சா' என்று அவன் கூச்சலிட்டுக் கொண்டு தாண்டியதுதான் தாமதம்; உடனே அவனுக்குக் கொழுக்கட்டை மறந்து விட்டது. 'அத்திரிப் பாச்சா அத்திரி பாச்சா' என்றே உச்சரித்துக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்து, தாயாரிடம் 'அம்மா' எனக்கு 'அத்திரி பாச்சா' சுட்டுக் கொடு என்று அடம்

பிடித்தான். அம்மா எதுவும் புரியாமல் விழித்தாள்.

இப்படியொரு வேடிக்கைக் கதை சிறு வயதில் கேட்டது.

*

## 17 செருப்போடு இரு

கிரேக்கத்தில் ஒரு ஓவியன் இருந்தான். ரொம்ப அழகாக சித்திரங்கள் எழுதக் கூடியவன். அவனுடைய வேலை என்னவென்றால் ஒவ்வொரு நாளும் சித்திரங்களை எழுதி விட்டு வாசலில் அதைக் கொண்டு வந்து வைத்து விடுவான். அப்படி ஒரு நாள் ஒரு போர் வீரனுடைய கம்பீரமான சித்திரத்தை எழுதி அதைக் கொண்டு வந்து தன்னுடைய வீட்டு வாசலிலே வைத்திருந்தான். அதை யார் பார்த்து எப்படி ரசிக்கிறார்கள்? என்று பார்த்துக் கொண்டே இருந்தான். அந்தப் பக்கம் போன பல பேர் அதைப் பார்த்து விட்டு போர் வீரன்படம் பிரமாதமாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு போனார்கள். அப்பொழுது ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளி அந்தப் பக்கம் வந்தான். அவனும் அந்தப் படத்தைப் பார்த்தான். தலையைப் பார்த்தான். வாளைப் பார்த்தான். காலிலே இருக்கிற செருப்பைப் பார்த்தான். பார்த்து விட்டு "எங்கே இந்த படம் வரைந்த ஓவியன்?" என்று கேட்டான். உடனே அந்த ஓவியன் அங்கு வந்தான். "செருப்பை சரியாக வரையவில்லையே, இந்த செருப்புக்கும் அந்த செருப்புக்கும் வித்தியாசம் இருக்கிறதே?" என்று கேட்டான். ஓவியனும் உற்றுப் பார்த்துவிட்டு

"ஆமாம் நீ சொல்வது சரிதான். என் தவறை திருத்திக் கொள்கிறேன்'' என்று சொல்லி அவனுக்கு நேராகவே அந்த செருப்பை ஒழுங்காக வரைந் தான். செருப்பு தைக்கும் தொழிலாளி சரி என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

மறுநாள் அந்த சித்திரக்காரன் ஒரு அழகான பெண்ணை வரைந்து அதே மாதிரி தெருவிலே மற்றவர்கள் பார்ப்பதற்காக காட்சியாக வைத்தான். அப்பொழுது இந்த செருப்பு தைப்பவன் அங்கே வந்தான். அவன் அதைப் பார்த்துவிட்டு சும்மா இருக்கக் கூடாதா? உடனே 'ஓவியன் எங்கே?' என்று கேட்டான். அவனும் வந்தான். ஓவியனைப் பார்த்து "இந்த சித்திரம் வரைந்திருக்கிறாயே, இந்த சித்திரத்தில் இருக்கிற பெண்ணுடைய பொட்டு சரியாக வைக்கப்படவில்லையே" என்று கேட்டான். ஆனால் அந்த ஓவியக்காரன் அதை சரியாகத்தான் வைத்திருந்தான். எனவே அந்த ஓவியக்காரனுக்கு கோபம் வந்து விட்டது. அந்த செருப்பு தைப்பவனைப் பார்த்து "நீ செருப்போடு இரு, அதற்கு மேல் வராதே" என்று சொல்லிவிட்டான்.

*

## இடிக்குப் பின் மழை

## 18

மணமக்களை வாழ்த்துகிற நேரத்தில் ஒரு குடும் பம்-அதுவும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒரு குடும்பம் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு வர லாற்று ரீதியாக நமக்கு இரண்டு சான்றுகள் இருக் கின்றன. உலகத்திலே பொதுவுடைமை வித்து

18

ஊன்றப்படக் காரணமான கார்ல் மார்க்ஸ் பெரிய அறிஞர். அவருடைய ஒப்பற்ற நூல் இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள பாட்டாளி வர்க்கத்தால் படிக்கப்பட்டு பின்பற்றப்படுகின்ற நூல். அந்த நூலினை எழுதிய காரல்மார்க்ஸ், அந்தக் கொள்கைக்காக வாழ்ந்த கார்ல் மார்க்ஸ் எத்தனை இடையூறுகளுக்கு, இன்னல்களுக்கு ஆட்பட்டார் என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது, அவற்றுக் கெல்லாம் ஈடு கொடுத்து, கணவனுக்கு வருகின்ற சங்கடங்களையெல்லாம் சகித்துக் கொண்டு தான் கார்ல் மார்க்சின் மனைவி இறுதி வரையில் வாழ்ந்தார் என்பது ஒரு வரலாறு.

அதைப் போல கிரேக்க நாட்டு தத்துவஞானி சாக்ரட்டீசை பற்றியும் படிக்கிறோம். அவர் பொது மக்களுக்காகவே தன்னை ஒப்படைத்துக் கொண்டு, எங்கே மக்களை சந்திக்கிறாரோ? அந்த இடத்தி லெல்லாம் அந்தக் கிழவன் தன்னுடைய கருத்துக் களைச் சொல்லத் தவறுவதில்லை. வீட்டு வாயிலில் நின்று கொண்டு தெருவிலே போவோர் வரு வோரையெல்லாம் இழுத்து நிறுத்தி தன்னுடைய கருத்துக்களை, தத்துவங்களை பொழிந்து கொண்டே இருப்பார். ஆனால் அவருடைய மனைவி அதற்கு நேர்மாறானவர். உள்ளே இருந்து குரல் கேட்கும்; திட்டுவார்; வசைபாடுவார். "உனக்கு வேறு வேலையே கிடையாதா" என்றெல்லாம் சத்தமிடுவார். சாக்ரட் டீசின் பேச்சைக் கேட்க வந்தவர்கள் "என்ன உள்ளே சத்தம்?" என்று கேட்பார்களாம். அதற்கு சாக்ரட்டீஸ், "ஒன்றுமில்லை, இடி இடிக்கிறது" என்று சொல் வாராம். பொறுத்துப் பொறுத்துப் பார்க்கும் அவ ருடைய மனைவி வெளியே வந்து ஒரு வாளி தண்ணீரை கொண்டு வந்து சாக்ரட்டீஸ் தலை

யிலே கொட்டுவாராம். அப்பொழுது பொதுமக்கள் "என்ன இது?" என்று கேட்பார்களாம். "இடி இடித்தது அல்லவா! அதைத் தொடர்ந்து மழை பொழிகிறது" என்று சாக்ரட்டீஸ் சொல்வாராம்.

இப்படி தன்னுடைய மனைவியை அனுசரித்துக் கொண்டே பொது வாழ்க்கையில் ஈடுபட்ட ஒரு பெருமகனின் வரலாற்றையும், மனைவியும் கணவனும் சேர்ந்தே பொது வாழ்க்கையில் எல்லா விதமான இடையூறுகளையும் தாங்கிக் கொண்டு குடும்பத்தை நடத்திய கார்ல்மார்க்ஸின் வரலாற்றையும் நான் சொன்னதற்குக் காரணம் இரண்டையும் உணர்வதற்காகத்தான். எந்த வாழ்வை தாங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை மணமக்கள் மதி ஒளியும், பிரின்சும் உணர்ந்து தங்கள் வாழ்க்கையை நடத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களை மணமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*

# நடக்குமா நடக்காதா? 19

முன்பெல்லாம் நான் திருமண விழாக்களில் பேசும்போது வெளிநாட்டு சிறுகதையொன்றை எங்காவது ஒரு மண விழா நிகழ்ச்சியில் சொல்வதுண்டு. அந்தக் கதையை மிக விரிவாக மெருகிட்டு நமது தமிழ்நாட்டுக்கு ஏற்றவாறு கூறுவேன்.

ஒரு கணவனும் மனைவியும் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். ஏழ்மை அவர்களைத் தாக்கியது.

19

பிழைப்புக்கு வழியின்றித் தவித்தனர். ஒரு நாள் மனைவி, தன் கணவனைப் பார்த்து வீட்டில் உள்ள காளை மாட்டைக் கொண்டு போய்ச் சந்தையில் விற்று அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஒரு பெட்டிக்கடை வைத்தால் குடும்பத்தை நகர்த்த லாமே என்று யோசனை கூறினாள். அவனும் உடன்பட்டு மாட்டை ஓட்டிக் கொண்டு சந்தைக்குச் செல்லும் சாலையில் நடந்தான். வழியில் மாடு அங்குமிங்கும் மிரண்டு ஓடியது. அப்போது ஆடு ஒன்றை ஓட்டிக் கொண்டு வந்த ஒருவன் அவனைப் பார்த்து "ஏனய்யா! அந்த முரட்டுக் காளையுடன் சிரமப்படுகிறாய்? என்னிடம் கொடுத்து விடு - அதற்குப் பதிலாக என் ஆட்டைத் தருகிறேன்" என்றான். அறிவிற் குறைந்த அந்தக் கணவன் மாட்டைக் கொடுத்து விட்டு ஆட்டை ஓட்டிக் கொண்டு சந்தையை நோக்கிச் சென்றான்.

எதிரேயொருவன் கையில் ஒரு பெட்டைக் கோழியுடன் வந்தான். அவன், அந்தக் கணவனை ஏமாற்றி "கோழியென்றால் கையிலேயே தூக்கிக் கொண்டு போய் விடலாம்" என்றதும், அதற்கும் அறிவிலிக் கணவன் ஒப்புக் கொண்டு ஆட்டை அவனிடம் கொடுத்து விட்டுக் கோழியை வாங்கிக் கொண்டு சந்தைக்குப் புறப்பட்டான்.

போகும்போது ஒரு பிரியாணிக்கடை! அந்தக் கடைக்காரன் அந்தக் கோழியை வாங்கி அன் றைக்குச் சமைத்து விடத் திட்டம் போட்டு அறிவிலிக் கணவனிடம் நயமாகப் பேசி, ஒரு குவளைத் தேநீருக்குக் கோழியை வாங்கிக் கொண்டான்.

அறிவிலிக் கணவன் தேநீரைக் குடிக்கும்போது அவன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரன் அவனைப்

பார்த்து, “அட முட்டாளே! நானும் உன்னைக் கவனித்துக் கொண்டு தான் வருகிறேன். மாட்டைக் கொடுத்து, ஆட்டை வாங்கினாய் - ஆட்டைக் கொடுத்து கோழியை வாங்கினாய் - கோழியைக் கொடுத்து தேநீர் வாங்கிச் சாப்பிடுகிறாய். இதை யெல்லாம் உன் மனைவி அறிந்தால் உன்னை விட்டு ஓடியே விடுவாள்; அல்லது உன்னை அடித்துத் துரத்துவாள்” என்றான்.

அறிவிலிக் கணவன், “அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது” என்றான். “நடக்கும்” என்றான் பக்கத்து வீட்டுக்காரன். நடக்குமா நடக்காதா என்பதற்கு இரு வரும் பந்தயம் கட்டிக் கொண்டனர். நடந்தால் அறிவிலிக் கணவன், அவனது வீட்டைப் பக்கத்து வீட்டுக்காரனுக்கு எழுதி வைத்து விட வேண்டும். நடக்காவிட்டால் பக்கத்து வீட்டுக்காரன் அவனது பெட்டிக் கடையை அறிவிலிக் கணவனுக்குத் தந்து விட வேண்டும். இப்படிப் பந்தயம் கட்டிக் கொண்டு இருவரும் வீட்டுக்குத் திரும்பினர்.



அண்டை வீட்டுக்காரன் அறிவிலியின் மனைவி யிடம் அவளது கணவன் செய்த முட்டாள்தனமான காரியங்களையெல்லாம் சொல்லி, “கடைசியில் உன் கணவன் மாட்டோடு சென்று ஒரு கோப்பைத் தேநீருடன் திரும்பியிருக்கிறான்” என்று கேலி செய் தான். அறிவிலியின் மனைவியோ தன் கண வனைப் பார்த்து, “அந்தத் தேநீரையாவது வயிறு நிரம்பச் சாப்பிட்டீர்களா?” என்று அன்பொழுகக் கேட்டாள்.

பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஒரே அதிர்ச்சி. பந்தயத்தில் தோற்றுப் போய்ப் பெட்டிக்கடையை எழுதிக் கொடுத்து விட்டான்.

மறுநாள் அந்த அறிவிலிக் கணவனை, அவன் பார்த்து, "என்னடா? உன் மனைவி உன்னை விட மூடமாக இருக்கிறாள்?" என்று கேட்டான். "அப்படி யொன்றுமில்லை, என்னதான் அவளுக்கு என் மீது வருத்தமோ கோபமோ இருந்தாலும் அதைப் பிறர் முன்னால் காட்டிக் கொள்ள மாட்டாள், நானும் அப் படித்தான், அந்தத் தைரியத்தில் தான் உன்னிடம் பந்தயம் கட்டினேன்" என்றான் அந்த அறிவிலிக் கணவன்.

தங்கள் குடும்பத்துப் பிரச்சினைகளைப் பிறர் முன்னால் பெரிதுபடுத்தக் கூடாது என்பதற்கு இந்தக் கதை எடுத்துக் காட்டு.

*

# 20 கனியும் கணையும்

சென்னை, 66ஆவது வட்டத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திலே நான் இவ்வாறு விளக்கினேன்.

"…. ஆங்கிலக் கதையொன்றில் வில்லியம் டெல் என்ற ஒரு வில் வீரனுக்குச் சோதனையொன்று வந்தது. தன்னுடைய குழந்தையின் தலையில் வைக்கப்படும் ஆப்பிள் பழத்தை அவன் அம்பு எய்து பிளக்க வேண்டும் என்பதே அந்தச் சோதனை. பழத்தின் கீழே இருப்பது குழந்தை என்கிற நினைப்பு வீரனுக்கு வந்திருந்தால் அவனுடைய வில் நடுங்கியிருக்கும். நாண் நடுங்கியிருக்கும்- அம்பு நடுங்கியிருக்கும். குழந்தை மாண்டிருக்கும்.

ஆனால் ஆப்பிள் பழத்தைப் பிளக்க வேண்டும் என்னும் ஒரே நோக்கத்தை மட்டுமே கொண்ட வீரன் அம்பெய்கிறான் - பழம் பிளக்கப்படுகிறது - குழந்தைக்கு ஏதும் சேதம் ஏற்படாமல்.

"இங்கே குடியரசு நாள் என்பது குழந்தை! அதன் தலையிலுள்ள நச்சுப் பழம் இந்தி; தி.மு. கழகமோ குறி பார்ப்பதில் கெட்டிக்காரக் கட்சி. குடியரசு நாளுக்கும் அவமதிப்பு வராமல் இந்தி ஏகாதிபத்தியத்தையும் பிளந்திடத் தவறாமல் தி.மு.கழகம் அம்பு எய்து வெற்றி பெறும் திறமை பெற்றது. இதைத் தி.மு. கழகம் குடியரசு நாளை அவமதிக்கிறது' என்று கூறித் தூண்டிவிடும் - உசுப்பிவிடும் - உத்தமர்களுக்குக் கூறிக் கொள்ளுகிறேன்.

*

## இதயம் பேசுகிறது 21

நான் ஒரு ஆங்கிலக் கதை படித்தேன். அந்தக் கதையில் ஒரு தாய்க்கு மகன் ஒருவன் இருந்தான். அந்த மகனுக்கு ஒரு ஆசைநாயகி இருந்தாள். அந்த ஆசைநாயகி தனது காதலனிடம் "உனது தாயின் இதயத்தை எடுத்து எனக்குத் தா" என்று கத்தியை எடுத்துக் கையிலே கொடுத்தாள். "கண்ணே! உன் கட்டளையை மீறமாட்டேன். இக்கணமே சென்று என் தாயின் இதயத்தைக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு கத்தியை எடுத்துக் கொண்டு சென்றான், அந்த கட்டழகன் தன் காதலிக்கு காணிக்கை செலுத்த.

மகனைப் பார்த்தவுடன் அந்தத் தாய் "வாடா மகனே சாப்பிடலாம்" என அழைத்தாள். ஆனால் அந்த மகனோ தாய்மீது கத்தியுடன் பாய்ந்து குத்தினான். நெஞ்சைப் பிளந்து இதயத்தை எடுத்தான். எடுத்துக் கொண்டு தன் காதலியின் காலடியில் வைக்க ஓடினான். ஓடிய வேகத்தில் கால் தடுக்கி கீழே விழுந்தான்.

அப்போது அவன் கையிலிருந்த அவனது தாயின் இதயம் "என்ன மகனே! அடிபலமா? வலிக்கிறதா?" என்று கேட்டது.

தாய் ஒருத்திக்குத்தான் அத்தகைய சிறப்பு உண்டு. தமிழை நாம் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறோம். அந்த தமிழைக் காக்கத்தான் நாம் போராடுகிறோம்.

*

## 22 புலிவால்

மலையாள மொழியில் இலக்கியங்கள் மாத்திரமல்ல, குத்தலான, கேலியான கிண்டல்களே கூட உண்டு. 'சுருக்' கென்று தைக்கக்கூடிய கேலி மொழிகள், மலையாளத்திலே நிரம்ப உண்டு. அருமை நண்பர் எம்.ஜி.ஆரோடு பழகிய நேரத்தில் - நான் நீண்ட காலம் அவரோடு பழகியது உங்களுக்குத் தெரியும். இளம் வயதிலே பழகிய போது நான் அவரிடம் கேட்பேன். மலையாளத்தில் மிக சிறப்பான 'சுருக்' கென்று குத்தக்கூடிய கேலி மொழி எது? என்று கேட்டபோது - 'நாயர் புடிச்ச

புலிவால்' என்று சொன்னார். அதற்கு தமிழிலே பழமொழி ஒன்று இருக்கின்றது. என்னவென்றால், 'உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும்' என்று சொல்வோம். அதாவது உடும்பைப் பிடிக்க ஒருவன் போனான். உடும்புஅவன் கையைப் பிடித்து விட்டது. உடும்பு தனக்கு வேண்டாம். கையை விட்டால் போதும் என்று கெஞ்சினான் என்று தமிழிலே சொல்வோம்.

ஆனால், 'நாயர் புடிச்ச புலிவால்' என்பது ஒரு நல்ல கதையைக்கூட நமக்கு எடுத்துக்காட்டும். நாயர் புலிவாலை பிடித்து விடுகிறார். புலி, நாயருக்குப் பயந்து ஓடிக் கொண்டிருக்கிறது. நாயர், புலி வாலை பிடித்துக் கொண்டே இருக்கின்றார். என்ன கஷ்டம் என்றால் - புலிவாலை நாயர் விட்டால் புலி, நாயர் மீது பாய்ந்து விடும். நாயர் விடாத காரணத்தால் புலி ஓடிக் கொண்டேயிருக் கிறது. நாயர் புடிச்ச புலி வால் - இன்றைக்குக்கூட பொருத்தமாக இருக்கிறது பாருங்கள். (கைதட்டல்) புலி வாலை நாயர் புடிச்சாரோ இல்லையோ, நம் நாடு புலி வாலை பிடித்துக் கொண்டு இன்று படாதபாடு பட்டுக் கொண்டு இருக்கிறது. (கைதட்டல்)

*

## 23 தெரியாத பேச்சு

சோவியத் நாட்டில் ஒரு இளைஞன் ஒரு மலை முகட்டை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தான். அவன் அப்படி நடந்தபோது எதிரே குள்ளமான உருவம் கொண்ட பெரியவர், அவன் எதிரே வந்தார்.

23

அந்தப் பெரியவர் அந்தப் பையனைப் பார்த்து கேட்டார். "ஏன் இந்த மலை முகட்டிற்கு போகிறாய்?" என்று. அவன் சொன்னான் :

"அந்த மலைமுகட்டிலேதான் லெனினுடைய வீடு இருக்கிறது. அவருடைய வீட்டிற்குப் போகிறேன்" என்றான். "நீ அவரைப் பார்த்தது இல்லையா?" என்று பெரியவர் கேட்கிறார். "பார்த்ததில்லை; அதனால்தான் அவரைப் பார்ப்பதற்காக போகிறேன்" என்கிறான். "அப்படி என்ன அவரிடத்திலே விசேஷம்" என்கிறார் பெரியவர்.

"அவரை மக்கள் அனைவரும் நேசிக்கிறார்கள். எனவேதான், அவரைப் பார்க்கப் போகிறேன்" என்கிறான், அந்த சின்னஞ்சிறு இளைஞன்.

'சரி போ' என்று சொல்லிவிட்டு பெரியவர் போய் விடுகிறார்.

அவர் போய் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்த சாலை ஓரத்திலே ஒரு சிறுமி அந்தப் பையனை பார்த்து "என்னப்பா இவ்வளவு நேரம் லெனினோடு என்ன பேசிக் கொண்டிருந்தாய்?" என்று கேட்கி றாள். அந்தப் பையனுக்கு வியப்பு! இதுவரையில் தான் பேசிக் கொண்டிருந்தது லெனினோடு தான் என்பது தெரியாது. சிறுமி சொன்ன பிறகு தான் அது தெரிகிறது. லெனினோடா பேசிக் கொண்டிருந்தேன் என்று! அவரைத் தேடி ஓடுகிறான். அதற்குள் அவர் எங்கோ விரைவாக சென்று மறைந்து விடுகிறார்.

எனவே லெனின் என்று தெரியாமலேயே லெனினைப் பற்றி பேசிக் கொண்டிருந்தான். அதைப் போல இன்றைக்கு இந்தியாவிலே சில பேர் இந்தியா எது? என்று தெரியாமலேயே இந்தியாவைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். லெனினைப் பற்றி

அந்தப் பையன் கொண்டிருந்த பற்று குறைத்து எடைபோடதக்கது அல்ல. அதைப்போல இந்தியாவைப் பற்றி பேசுகின்ற சிலபேர் கொண்டிருக்கின்ற பற்றும் குறைத்து எடை போடக் கூடியது அல்ல. ஆனாலும் லெனினைத் தெரியாமலேயே லெனினைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த இளைஞனைப் போல் இந்தியாவைத் தெரியாமலே இந்தியாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது தான் எனக்கு வியப்புக்குரிய ஒன்றாக இருக்கிறது.

*

# வெண்ணெய் உருகுது வெயிலில்

24

நெருக்கடி காலக் கொடுமைகளை கழக உடன்பிறப்புகள் யாரும் அவ்வளவு எளிதில் மறக்க முடியாது. அந்த நேரத்தில் தி.மு.கழகத்தின் மீது ஏவிவிடப்பட்ட கொடுமைகளை, நடத்தப்பட்ட அக்கிரமங்களை வேறு ஒரு இயக்கம் சந்தித்திருக்குமேயானால் அந்த இயக்கமே இல்லாமற் போயிருக்கும்.

கழக தளகர்த்தர்கள், முன்னணியினர் ஐநூறு பேர் மிசாக் கைதிகளாக சிறையில் வாட-எழுதத் தடை, பேசத் தடை, உண்மைச் செய்திகளை வெளியிடவும் தடை என்று தணிக்கைக் கெடு பிடிகள் கொடி கட்டிப் பறக்க,

தன்னந் தனியராக - தனது பேனா முனையை வைத்தே இந்த இயக்கத்தை அழிவிலிருந்து மீட்டு, தூக்கி நிறுத்திய பெருமை கலைஞருக்கு உண்டு.

24

நாட்டு நடப்புகளை - ஆட்சியாளர்களின் அக்கிரமச் செயல்களை கழக உடன்பிறப்புகளுக்கு விளக்க - அதே நேரத்தில் தணிக்கை அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு தப்பி வெளிவரும் வகையில் அந்த நேரத்தில் கலைஞர் தீட்டிய கடிதங்கள் ஒவ்வொன்றும் காலத்தினால் அழியாத கருத்துக் கருவூலங்கள் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

நெருக்கடி நிலை முடிவுக்கு வந்த பின்னரும் அது ஏற்படுத்திய தாக்கங்கள் மாறாத நிலையில் 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் தேதியன்று முரசொலியில் "வெண்ணெய் உருகுது வெயிலில்" என்ற தலைப்பில் கலைஞர் தீட்டிய கடிதத்தை இங்கு எடுத்து வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். கடிதங்கள் எழுதியே கழகத்தை காத்த கலைஞரின் எழுத்து வன்மைக்கு அசைக்க முடியாத ஆதாரமாக திகழும் அந்தக் கடிதம் இதோ:

"உடன் பிறப்பே,

இலக்கியக் கடிதம் எழுதி எத்தனையோ நாட்கள் ஆயிற்றல்லவா, அந்தக் குறை உனக்கு உண்டு என்பதை உணர்ந்து இன்று எழுதுகிறேன்.

நெருக்கடி காலத்தில் 'இலக்கியம்' எவ்வளவு பெருந்துணையாக விளங்கியது நமக்கு! தணிக்கை அதிகாரிகளைத் தவிப்புக்கு உள்ளாக்கி அவர்களால் வெட்டப்பட்டது போக எஞ்சிய எழுத்துக்களும் உனக்கு இன்பமூட்டின, எழுச்சியூட்டின என்று என்னைக் காணும் போதெல்லாம் சொல்வாயே நீ! கடிதங்களில் என்னை உற்சாகப் படுத்துவாயே நீ!

ஆமாம்! கரும்பைப் பல துண்டுகளாக வெட்டி - அதில் ஒரு துண்டைத் தின்றாலும் சுவை

மாறுவதில்லையே - அதைப் புரிந்து கொள்ளாமல் தான் தணிக்கை அதிகாரிகள் நான் எழுதிய இலக்கியக் கடிதங்களைத் துண்டு துண்டாக வெட்டினர். ஆனால் நீயோ 'வெட்டியதால் கரும்பு, எட்டியாகி விடாது' என உரைத்துச் சுவைத்து மகிழ்ந்தாய்!

'யசோதர காவியம்' எனும் வடமொழி நூல் ஒன்றின் கதைச் சுருக்கத்தை எழுத்தில் வடித்துக் கடிதமாகத் தீட்டினேன். உனக்கு! அதைத் தீட்டியதின் நோக்கம் என்ன தெரியுமா? நல்ல தமிழ்ச் சொற்கள் பழக்குலைகள் போலக் குவிந்து கிடக்கும் போது அவற்றை விடுத்து ஆபாசச் சொற்களைத் தேடிப் பிடித்து நம்மீது அவதூறு அர்ச்சனை செய்கிறார் களே; அவர்களது இயல்பை விளக்க வேண்டும் என்பதுதான், அந்தக் கடிதத்தின் நோக்கம்! அத்தகைய இழிதன்மை கொண்டோரின் போக்கு பற்றி உரைத்திடத்தான் "யசோதரா காவியத்தில்" வரும் மகாராணி ஒருத்தியை அவர்களோடு ஒப் பிட்டுக் காட்டினேன்.

24

அவள் அழகி! பேரழகி! 'அமிர்தமதி' என்பது அவள் பெயர் மட்டுமல்ல; அவளையே அமிழ்த மென அருந்தி மகிழ்ந்தான் அவளை மணந்த மன்னவன் அவனும் அவளுக்குக் குறைவான அழகு படைத்தவனல்ல! அந்த ஆண்மையாளனின் விரிந்து பரந்த மார்பகத்தில் அவள் முகம் புதைத்தால் நீலவானத்தில் நிலவு தோன்றுவது போலத்தான் இருக்கும். அவனது அகன்ற தோள்களில் அவளோர் கிள்ளை போல் தொத்திக் கொள்ள முடியும். அவளை, அவன் தன் காதல் தெய்வமாகத்தான் போற்றினான்-புகழ்ந்தான்-முகில் தழுவும் அரண்மனை உப்பரி கையின் உச்சிமாடத்தில், அம்ச தூளிகா மஞ்சத்திலே

அவனோடு படுத்திருக்கும்போது பெற்ற நினைவு மட்டும் அங்கே இருந்ததில்லை. "இன்பமே" என்று கொஞ்சுவான். அவளோ இன்பத்தை வேறு எங்கேயோ எதிர்பார்த்தாள். தொடுவான்! துவளமாட் டாள். தொலைநோக்குடன் ஆகாயத்தை வட்டமிடும் அவள் விழிகள்! "என் உயிர்மூச்சே" என்று அணைப்பான்! அவளோ, ஒரு பெருமூச்சுடன் புரண்டு படுத்துக் கொள்வாள் வேறு பக்கமாக! "துடியிடையடி உனக்கு!" என்று தடவிக் கொடுப் பான். துடித்திடும் அவள் நெஞ்சம்! ஆனால் அவனை நினைத்து அல்ல! வேறு ஒருவனை நினைத்து!

## 24

நாட்டின் மகாராணி - மாடமாளிகைக்குச் சொந்தக் காரி - மன்னனின் பட்டமகிஷி - கொற்றக்குடை கொண்டவனுக்குத் துணை - கொலுமண்டபத்தில் அரசனுடன் வீற்றிருந்து குடிமக்களின் குறை கேட்கும் பேரரசி!

எந்த நேரத்திலும் இட்ட கட்டளை என்னவென்று கேட்டு ஓடிவர ஏராளமானப் பணியாட்கள் உண்டு! மாற்றார் தலைகளைப் பந்தாடும் மாவீரர்களும் மண்டியிட்டுப் பணிந்து நிற்பர். அவள் மாளிகைத் தாழ்வாரத்தில் நடந்து வந்தாள். மாவீரர்களும் பணிந்து நிற்பர்.

சீர், சிறப்பு, கூட கோபுரம், கொற்றவனின் மடியில் இடம், இத்தனையிருந்தும் அவள் இதயம், எதையோ ஒன்றைத் தீராத பசியோடு தேடிக் கொண்டு இருந்தது.

அமிர்தமதி தந்த சுகம் போதுமென்று அரசன் அயர்ந்து தூங்கிடுவான். அதன் பிறகு அவள் மெல்ல எழுந்து பூனைப் பாதங்களால் நடைபோடுவாள். அவள் மனங்கவர்ந்த யானைப் பாகனுக்காகத் தான் இத்தனை தவிப்பும்!

அரண்மனைத் தோட்டத்திலேயே அவன் காத் திருப்பான். அமிர்தமதி ஆசையுடன் அவனை நெருங்குவாள்! அந்த யானைப்பாகன், அதற்குள் தன் கையிலிருக்கும் சவுக்கால் அவளை நையப் புடைப்பான். அவள் தாமதமாக வந்ததற்காக அவன் தரும் தண்டனை அது! அந்தச் சவுக்கடிகளால் அவள் ஆடைகள் கிழிந்து நிலவொளியில் அவள் அங்கங் கள் தலைகாட்டிச் சிரிக்குமே அல்லாது அழத் தொடங்கிடாது! 'மன்னித்து விடு என் மன்மதனே' என்று மகாராணி அந்த யானைப்பாகனை ஆரத் தழுவி, ஆயிரம் முத்தங்களை அவன் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பொழிந்திடுவாள். பின்னர் இருவரும் பசும்புற்றரையில் வீழ்ந்தவாறே 'பரலோகப் பயணம்' 'சொர்க்கலோகச் சுற்றுலா' அனைத் தையும் நடத்துவர். யானைப் பாகனின் உடலில் கசியும் சீழும் ரத்தமும் அமிர்தமதியின் தங்க மேனியில் ஆங்காங்கு படிந்திருக்கும். அது அவ ளுக்கு வைரமும் பவளமும் போலத்தோன்றும்! வேறொன்றும் அந்த யானைப் பாகனுக்கு நோயில்லை; தொழுநோய்தான்!

இதுதான் உடன்பிறப்பே! அமிர்தமதியின் கதை! நல்ல கணவன்-நாடாளும் மன்னவன் - ஆண்மை யாளன் - அழகரசன் - அவனிருக்க, அவனை விடுத்து-தொழுநோய் கொண்ட யானைப் பாகனிடம், சவுக்கடிகளையும் தாங்கிக் கொண்டு சல்லாபத் திற்குத் தவங்கிடந்த அந்த மகாராணியைப் போலத் தானே, சில பேர் நல்ல தமிழ் இருக்க, அதை விடுத்து நாற்றமெடுத்த குட்டையில் நனைந்த சொல் எடுத்து எழுதுகின்றார் - ஏசுகின்றார் - என வேதனைப்பட்டு எழுதியிருந்தேன்.

# 24

அந்தக் கடிதமே, உன் கைக்குக் கிடைக்காமல் தணிக்கை அதிகாரிகள் தடுத்து விட்டனர். நீதி மன்றம் வரையிலே நடக்க வேண்டியிருந்தது. உரிமைகள் பறிக்கப்பட்டிருந்த நேரம் - ஆதலால் நமது வழக்கை எடுத்துக் கொள்ளவே யாரும் தயாராக இல்லை!

அழகிய நாதனை விட்டு, அழுகிய பாகனை நாடி ஓடுகிறாளே ஒருத்தி-அதைப் போல எழிலார் தமிழ்ச் சொற்களை விட்டு, எருக்கம்பூ வார்த்தைகளைத் தேடுவது தீது என்று கூறுவதற்காக எழுதிய கடிதம், ஏதோ சந்தேகப் பார்வைக்கு ஆளாகி - அதிகாரிகளால் அறவே தடுக்கப்பட்டு விட்டது! இந்தக் கதையின் குறிப்பை ஏற்கனவே ஒரு கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். இன்று சற்று விரிவாக எழுதினேன்.

முன்பு ஒரு சில எழுத்தாளர்களின் போக்கினை சுட்டிக் காட்ட நான் மேற்கோள் காட்டிய இந்தக் கதை இப்பொழுது அந்த எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல, நம்மை வெறுத்து வேறிடம் சென்றுள்ளார்களே சில பேர், அவர்களுக்கும் பொருந்தும் வண்ணம் அமைந்துள்ளதன்றோ!

காவியங்கள், கவிதைகள் எத்துணைச் சுவை கூட்டுபவைகளாக இருக்கின்றன; அதே சமயத்தில் மறைமுகமாக நாம் தெரிவிக்க வேண்டிய அரசியல் கருத்துக்களுக்கும் அவை எவ்வளவு பயன்படுகின்றன, பார்த்தாயா!

இன்று உனக்குக் கடிதம் எழுதத் தொடங்குவதற்கு முன்பு 'குறுந்தொகை'யைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். கவிஞர் வெள்ளி வீதியார் என்பார். ஒரு பாறையை நோக்கி என்னை அழைத்துச்

சென்றார். எந்தப் பாறை? எந்த ஊரில்? மனப் பாறையா? வால்பாறையா? என்றெல்லாம் கேட்டு விடாதே! ஒரு மலைக்கருகில் உள்ள சிறிய பாறை. அதனை நோக்கி என்னை அழைத்துச் சென்று 'அதோ பார்' என்று சுட்டிக் காட்டினார். ஆவலுடன் நானும் பார்த்தேன். கண்ட காட்சியைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நான் சொல்லி விடுகிறேன், நீ எந்த நிகழ்ச்சியுடன் அதனைப் பொருத்திக் கொண் டாலும் பரவாயில்லை-நான் பார்த்த நிகழ்ச்சியை அப்படியே உனக்குப் படம் பிடித்துக் காட்டி விடுகிறேன்.

சிறியதோர் பாறை! அந்தப் பாறை மீது பெரிய தோர் வெண்ணெய் உருண்டை இருக்கிறது! அந்த வெண்ணெய்க்கு ஒருவன் காவல் இருக்கிறான். அவனுக்கு இரண்டு கைகளும் கிடையாது. வாயும் பேச முடியாது - ஊமை! அந்த வேளையில் வெயி லும் ஏறுகிறது. வெயில் ஏற ஏற பாறை மீதுள்ள வெண்ணெய் உருகுகிறது. அதை எடுத்து வேறிடம் கொண்டு போகலாம் என்றாலோ, காவல்கார னுக்குக் கைகள் இல்லை! யாரையாவது, உதவிக்கு அழைக்கலாம் என்றாலோ, வாயும் இல்லை! வெண் ணெய் உருகிக் கொண்டேயிருக்கிறது!

உடன்பிறப்பே, கையில்லா ஊமையரிடம் வெண்ணெயைக் காவல் காத்திடுமாறு பணித்தால் என்ன ஆகும் - என்பதற்கு நான் கண்ட காட்சி, விளக்கமான பதிலாக அமைந்திருக்கிறது அல்லவா?

இதைத்தான் வெள்ளி வீதியார், குறுந்தொகை யில் அழகு தமிழ் எடுத்துச் சித்திரித்துள்ளார்.

"ஞாயிறு காயும் வெல் அறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல...."

கையில்லா ஊமையை வெண்ணெய்க்குக் காவல் வைத்து, அதனை வெயிலிலும் வைத்து விட்டால்?

உடன்பிறப்பே! வெள்ளி வீதியார், குறுந்தொகை யில் வேடிக்கையாகக் காட்டும் இந்த நிகழ்ச்சி நாட்டில் உண்மையாகவே நடந்தால் எவ்வளவு வேதனையாக மாறிவிடும். புரிகிறதா?

*

# 25 மாமியார் உடைத்தால் மட்டும் மண்சட்டியா?

உடன்பிறப்பே....

ஒரு கற்பனைக் கதையை முதலில் சொல்லி இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன். என்ன கதையென்று தெரிந்து கொள்ள ஆவல் ஏற்படுகிற தல்லவா? புராணமும் தனமும் கலந்த ஒரு கதம்பக் கதை! எமலோகத்தில் தர்மராஜன் கொலு வீற்றிருக் கிறான். எமனுக்கு தர்மராஜன் என்று பெயர் ஏன் வந்தது? மனிதர்களைக் கொன்று உயிரைப் பறித்துச் செல்பவனுக்குத் தர்மராஜன் என்ற பெயரா? இப்படியெல்லாம் கேட்கத் தோன்றும்! ஆயுட்காலம் முடிந்தவுடன் அவர்களின் உயிரைக் கொண்டு செல்ல வேண்டிய தெய்வீகக் கடமையின் காரண மாகவே எமன் செயல்படுகிறானேயல்லாமல் துளி யளவும் அவன் தர்மம் தவறுபவன் அல்லன் என்பதால் தர்மராஜன் என்று அழைக்கப்படுகிறான் எனப் புராணிகர் கூறுவர்.

25

பதினாறு வயதில் மார்க்கண்டேயன் சாக வேண்டுமென்றிருந்தது. எனவே அவன் உயிரைப் பறிக்க எமன் எருமையிலேறி பாசக் கயிறுடன் வந்தான். மார்க்கண்டேயனோ மரணத்துக்குப் பயந்து ஓடி, திருக்கடையூரில் உள்ள கோயிலுக்குள் நுழைந்து சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். சிவலிங்கம் வெடித்து அதிலிருந்து சிவனார் புறப்பட்டு எமனை எதிர்த்தார். எமன், தனது கடமையை நிறைவேற்ற வந்திருப்பதாகச் சொன்னான். சிவபெருமான் கட்டளைப்படியே மார்க்கண்டேயன் உயிரைப் பறிப்பது தனது பணி என்று வாதிட்டான். ஆனால் சிவபெருமான் தனது ஆணைக்கே விதிவிலக்கு அளித்து - மார்க்கண்டேயன் வாழ்வில் 'மறுமலர்ச்சி' ஏற்படுத்தி என்றைக்கும் பதினாறாக வாழச் செய்தான். இதுவும் புராணமே! இந்தப் புராணப்படியும் எமன், தன்னை தர்ம ராஜனாகவே காட்டிக் கொண்டு, சிவனை வணங்கித் திரும்பி விடுகிறான்.

அத்தகைய தர்மராஜன் எனப்படும் எமன் தர்பாரில் சித்ரபுத்திரன் இரண்டு வழக்குகளை முன் வைக்கிறான். அவற்றில் முதல் வழக்கு குறித்து எம தர்மனிடம் சித்ரபுத்திரன் விளக்கும் விதம் காண்க:

"மகாபிரபூ! இதோ இந்த மனிதர், பூலோகத்தில் தொண்ணூறு வயதுக்குமேல் வாழ்ந்துவிட்டவர். பெரிய பதவிகளில் மக்களின் ஆதரவு பெற்று முதல்வராக அமர்ந்து அரசோச்சியவர். பூவுலகில் இவர் ஒரு கட்சியில் முக்கிய பொறுப்பும் வகித்தவர். ஆனால் இரண்டு மூன்று தடவை அக்கட்சியின் கட்டுப்பாட்டை மீறி, பேசியும் செயல்பட்டும் வந்த காரணத்தினால் அந்தக் கட்சியின் தலைமை இவரை எச்சரித்ததும் உண்டு. அதற்காக இவர்

25

வருத்தம் தெரிவித்துக் கொண்டதும் உண்டு. ஆனால் அப்படி வருத்தம் தெரிவித்த பிறகும், மீண்டும் மீண்டும் கட்சித் தலைமை மீது வீண் புகார்களைக் கூறத் தலைப்பட்டார். அதைப் பற்றி யெல்லாம் இவரைக் கேட்டபோது, தலைமை யையே அறைகூவலுக்கு அழைத்து அறிக்கைகள் விடுத்தார். இப்போது இவர், தன்னைச் சொர்க்கத் திற்குத்தான் அனுப்ப வேண்டுமென்கிறார். மகா பிரபுவின் தீர்ப்புக்காக இந்த மன்றமே காத் திருக்கிறது.

சித்ரபுத்திரனின் கூற்றைக் கேட்டதும் எமதர்ம ராஜன் சொல்வது என்னவென்றால், "ஓகோ! இவர் பெரும் பதவிகளில் இருந்தவராக இருக்கலாம். எனினும்... எனினும்... இவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியிருக்கிறார். கட்சித் தலைமையையே விமர்சித் திருக்கின்றார். அது மட்டுமல்ல, முதலில் சில தவறு களுக்கு வருத்தம் தெரிவித்து விட்டு, திரும்பவும் அதே தவற்றைச் செய்திருக்கிறார். இப்படிக் கட்டுப் பாடு மீறுகிற இவரை சொர்க்கம் சென்றிட அனுமதித் தால் - சொர்க்கமும் கட்டுப்பாட்டை மீறி, சுத்தமாகக் கெட்டு விடும். ஆகையினால், இவரை நரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடுகிறேன். பெரும் பதவியில் இருந்தவர் - கட்சிக்காக உழைத்தவர் என்பதற்காக இவரது 'கட்சிக் கட்டுப்பாடு' மீறிய செயலை ஏற்க முடியாது. அதனால் இவர் சொர்க்கத்தைக் கனவிலும் காண முடியாதபடிக்கு நரகத்தில் தள்ளிவிடுமாறு கண்டிப்பான கட்டளை யிடுகிறேன்"

எமதர்மராஜன் தீர்ப்பையொட்டி, அந்த மனிதரை, சித்ரபுத்திரன் நரகலோகத்திற்குச் சில கிங்கரர் களுடன் அனுப்பி வைக்கிறான்.

25

அடுத்த வழக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இப்போதும் சித்ரபுத்திரன்தான் பேசுகிறான்:

“அய்யனே! மகாபிரபூ, அடுத்து வந்துள்ள இந்த வழக்கும் ஏறத்தாழ முதல் வழக்கைப் போன்றது தான். இன்னும் சொல்லப் போனால், இவர்-முதல் வழக்கில் சம்பந்தப்பட்டு தங்களின் தீர்ப்புக்கு ஆளானவரை விட அதிகப்படியான அளவுக்கு, இவர் சார்ந்திருந்த கட்சியின் கட்டுப்பாடுகளை பேச்சால், செயலால் மீறியிருக்கிறார். முதல் வழக்கில் குறிப்பிட்டவராவது கட்சித் தலைமையைக் குறை கூறி, தலைவரை விமர்சனம் செய்தவர். ஆனால் இவரோ, கட்சியே தன்னுடையது - கொடியே தனக் குரியது - கட்சித் தலைவரையே நான் விலக்கி விட்டேன் என்று தீர்மானம் போட்டு கட்சியின் சின்னத்தையே முடக்குவதற்கு வழக்குத் தொடர்ந்து, அதிலே தோற்றுப் போய்ப் புதுகட்சி தொடங்கியவர். எனவே, மகாபிரபுவாகிய தாங்கள், முதல் வழக்கில் அளித்த தீர்ப்பையே இதற்கும் வழங்குவீர்கள் என எதிர்பார்த்து அமைகிறேன்.”

சித்ரபுத்திரன், வழக்கின் விபரத்தைச் சுருக்கமாக எடுத்துச் சொன்னதும், எமதர்மராஜன், “சித்ர புத்திரரே! நீர் எடுத்துரைத்த வழக்குகள் இரண்டும் ஏறத்தாழ ஒன்று போல இருந்தாலும் என் தீர்ப்பு ஒரே மாதிரி இருக்கப் போவதில்லை. இந்த மனிதர் சொர்க்கத்தில் இருக்கலாம் என்று நான் அனுமதிக் கிறேன்.” என்று கூறிவிட்டு மளமளவென்று சிம் மாசனப் படிகளில் இறங்கி வந்து - இரண்டாவது வழக்கில் நிறுத்தப்பட்டவரைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

அதிர்ந்து போன சித்ரபுத்திரன் “மகாபிரபு! இது என்ன விந்தையாக இருக்கிறது! ஒரே மாதிரி குற்றம்

புரிந்தவர்கள் - அதிலும் முதலில் தீர்ப்பளிக்கப்பட்ட நபரைவிட; இரண்டாமவர் மேலும் தீவிரமாகக் கட்சித் தலைமைக்குக் கட்டுப்படாமல் நடந்து கொண்டவர். ஆனால் முதலாமவருக்கு நரகம் என்றும் இரண்டாமவருக்கு சொர்க்கம் என்றும் ஆணை பிறப்பித்து விட்டீர்களே, தர்மராஜனாகிய தாங்களே தடம் புரளலாமா?" என்று மிகுந்த உருக்க முடன் எமதர்மராஜனைப் பார்த்து கேட்டான்.

"அடேய்! சித்ரபுத்திரா! என் தீர்ப்புக்கே களங்கம் கற்பிக்கிறாயா? என்னால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே நாம் இருவரும் இதுவரையில் ஒன்றுபட்டுச் செயல்பட்டது போல இனியும் செயல்பட முடியாது"

25

என்று கர்ச்சித்தான் எமதர்மன்!

"மகாபிரபு, கொஞ்சம் சிந்தியுங்கள்! ஒரே விதமான குற்றத்துக்கு இருவேறுவிதமான தீர்ப்பு களா?' என மீண்டும் கேள்விக்கணை விடுத்தான் சித்ரபுத்திரன்!

"உனக்கும் எனக்கும் இனி ஒட்டுமில்லை; உறவுமில்லை போ!" எனக் கூறிக்கொண்டே தர்ம ராஜன், சொர்க்கம் செல்பவனின் தோளில் கை போட்டுக் கொண்டே கொலுமண்டபத்தை விட்டு வெளியேறினான்.

உடன்பிறப்பே, நவீன புராணக்கதையை நான் முடித்து விட்டேன். நீ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ அறிவிப்பை ஒருமுறை படித்து விடு!

"கடந்த வருடம் நிருபன் சக்ரவர்த்தி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றபோது, கல்கத்தா

விலிருந்து வெளியாகும் வங்காள மொழிப் பத்திரிகை ஒன்றுக்கு கட்சியைப் பற்றி அவதூறாக பேட்டி அளித்திருந்தார்.

இது பற்றி கட்சியின் மத்திய கமிட்டி, தீவிர நட வடிக்கை எடுக்குமாறு கட்சியின் பொதுச் செய லாளரை கேட்டுக் கொண்டது. அதன் பேரில், விளக்கம் கேட்டபோது, எதிர்காலத்தில் இதுபோன்று நடக்காது என உறுதியளித்தார்.

மறுபடியும் கட்சியின் 15-ஆவது தேசிய கூட்டம் நடைபெறும் போது கட்சி மீது அவதூறு கூறினார்.

இதனால் நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் மத்திய கமிட்டி, பொலிட்பீரோவை கேட்டுக் கொண் டது. கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு நிருபன் சக்ரவர்த்தி செய்த சேவை மற்றும் தியாகத்தைக் கருத்தில் கொண்டு, தேர்வு செய்யப்பட்ட பதவிகளில் இருந்து அவரை நீக்குவது என்றும் அவர் தன்னை திருத்திக் கொள்ள ஒரு வாய்ப்பு தருவது எனவும் கட்சியின் மத்திய கமிட்டி முடிவு செய்தது.

ஆனால் எதிரிகள்கூட கூற முடியாத புகார்களை நிருபன் சக்ரவர்த்தி தனது தவறுகளை திருத்திக் கொள்வதற்குப் பதிலாக கட்சியின் மீதும் கட்சித் தலைவர்கள் மீதும் விஷமத்தனமான ஆதாரமற்ற குற்றசாட்டுகளை கூறியது வருத்தத்திற்குரியது.

“எதிரிகள்கூட கூறாத புகார்களை நிருபன் சக்ரவர்த்தி கட்சியின் மீது கூறியுள்ளார். கட்சியின் ஒழுக்க விதிகளுக்கு இது முரணானது. எனவே **கட்சியை விட்டு நீக்கப்படுகிறார்.** கட்சியைவிட எந்த உறுப்பினரும் முக்கியமானவர் அல்ல, அவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.”

இந்த அறிக்கை வழி நிருபன் சக்ரவர்த்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். இப்போது அவருடன் கூட்டணி சேருகின்ற கட்சியுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி வைத்துக் கொள்ளுமா?

அது என்ன; மருமகள் உடைத்தால் பொன்சட்டி; மாமியார் உடைத்தால் மட்டும் மண்சட்டி?

*

# 26 பொறுமைக்கு சான்று

நபிகள் நாயகம் மிக சாதாரணமான எளிய மனிதராகத் திகழ்வார். அவர் பெரிய மேதை என்றாலும் - பெருமகனார் என்றாலும்கூட எளிய வாழ்க்கையில் பற்றும் பாசமும் கொண்டவர் என்ற காரணத்தால் ஒரு குறிப்பிட்ட தெருவிலே ஒரு நாள் நடந்து செல்லும் பொழுது அவர் மீது வெறுப்புற்ற ஒரு மங்கை மாடியிலேயிருந்து அவர் தலையிலே குப்பையைக் கொட்டுவது வழக்கம். ஒவ்வொரு நாளும் நாயகம் அங்கே வரும் பொழுது கூடையிலேயிருந்து குப்பை விழும். அதை உதறி விட்டு நபிகள் நாயகம் தன்னுடைய பாதையிலே நடந்து செல்வார்.

ஒரு நாள் அப்படி வரும்பொழுது குறிப்பிட்ட அந்த வீட்டு மாடியிலேயிருந்து குப்பை கொட்டப்பட வில்லை. நபிகள் நாயகத்திற்கு ஒரே ஆச்சரியம். திகைத்து நின்றார். அங்கே உள்ளவர்களைப் பார்த்து "தினந்தோறும் ஒரு அம்மையார் என் மீது

குப்பை கொட்டுவார்களே! அவர்கள் எங்கே?" என்று கேட்டார். "அவருக்கு உடல் நலமில்லை. அதனால் தான் அந்தக் காரியத்தை அவர் இன்றைக்கு செய்யவில்லை" என்றனர். உடனடியாக மாடிப் படியிலே ஏறிச் சென்று அந்த அம்மையாரிடம் உடல் நலம் விசாரித்து அவருடைய உடல் நலிவு தீர மருந்து கொடுத்தார் என்பது நபிகள் நாயகத் தினுடைய பொறுமைக்கு, அன்பு உள்ளத்திற்கு அவருடைய அறவழி நிலைக்கு ஒரு சான்றாக விளங்குகின்றது.

*

# ஏடுக்கவோ கோக்கவோ

27

மேடைப் பேச்சுக்கு என்னைத் தயாராக்கிக் கொண்ட பள்ளிக்கூட சொற்போர் போட்டிகளின் முதல் பேச்சுப் பற்றி என்னால் எண்ணிப் பார்க்காமலிருக்க முடியவில்லை. முதன் முதலாக நான் மன்றத்தில் நின்று எழுப்பிய குரல் 'நட்பு' என்ற பொருள் பற்றித்தான்! அதில் பாரதத்தில் எல்லாம் மேற்கோள் காட்டிப் பேசினேன். கர்ணனும் துரியோதனனும் ஆருயிர் நண்பர்கள். ஒருநாள் கர்ணனும் துரியன் மனைவியும் சதுரங்கம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயம் துரியோத னன் அங்கு வருகிறான். துணைவன் வருவதைக் கண்ட துணைவி மரியாதை காட்டுவதற்காக ஆட் டத்தை விட்டு எழுகிறாள். துரியன் வருவதைக் கவனிக்காத கர்ணன் அவள் ஆட்டத்திலிருந்து போய்விட எண்ணுகிறாளாக்கும் என்று கருதி,

அவளது முத்தாரத்தை இழுக்கவே ஆரம் சிதறிக் கீழே கொட்டுகிறது. எந்தக் களங்கமும் இல்லாமல் சிரித்துக் கொண்டே துரியோதனன் நண்பனைத் தட்டிக் கொடுத்து, "எடுக்கவோ கோக்கவோ?" என்கிறான். சிந்திய முத்துக்களை எடுத்துக் கோக் கட்டுமா எனக் கேட்கிறான். நண்பனின் பெரு மனங்கண்டு கர்ணன் பூரித்துப் போகிறான். நண்பனுக்காகச் சோதரரைப் போர்க்களத்தில் சந்தித்து எதிர்த்து இறுதியில் உயிர் விடுகிறான். இந்த நிகழ்ச்சியை வில்லிப்புத்தூரார் பாரதத்திலிருந்து அழகாக எடுத்துச் சொல்லி மன்றத்தின் அமோக ஆதரவைப் பெற்றேன். அழகான தமிழில் தங்கு தடங்கலின்றிச் சொன்மாரி பொழிந்ததாக ஆசிரியர் கள் கூடப் பாராட்டினார்கள். அவர்களுக்கெல்லாம் எப்படித் தெரியும், நான் மூன்று நாள் இரவும் பகலும் அந்தப் பேச்சை எழுதி மனப்பாடம் செய்து வீட்டிலே யுள்ள தூண்களிடம் பேசிக் காட்டினேன் என்கிற ரகசியம், இப்போதல்லவா புரிகிறது, கர்ணனிடமும் துரியனிடமும் 'நட்பு' என்ற சிறந்த பொருள் இருந்தது - ஆனால் பிறன் மனைவியின் கழுத்திலுள்ள ஆரத்தைப் பற்றியிழுத்ததால் கர்ணனிடம் இழுக்கு மிகுந்த ஒரு பண்பும் இருந்தது.

*

## 28 அந்த நாள் வந்திலை!

உங்களுக்குத் தெரியும் குமணனுடைய கதை. குமணனுக்கு ஒரு தம்பி, அமணன் என்று சொல்லப்படுவதுண்டு. அவன் அண்ணனுடைய

நாட்டைப் பற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்காக அண்ணன் குமணனை காட்டிற்கு அனுப்புகின்ற சூழ்ச்சியை செய்து அனுப்பி விடுகிறான். அத்துடன் நிறுத்தவில்லை அவனுடைய வஞ்சகம்: அவனையே கொன்று விட்டால், படையெடுத்து வந்து நாட்டை மீட்டிடலாம் என்ற எண்ணத்தோடு அவனையே கொன்று விடவும் எண்ணுகின்றான். அப்பொழுது வறுமையிலே வாடிய ஒரு புலவர் பெருமான் குமணனிடத்தில் கொடை வாங்க வருகிறார். ஆனால் குமணன் இருக்கின்ற அவையில் அமணன் இருக்கின்றான். "கொடை பெற வந்தேன், நிதி பெற வந்தேன்" என்று புலவர் சொல்லுகின்றார். "காட்டி லிருக்கின்ற தன்னுடைய அண்ணனின் தலையை கொண்டு வருகின்றவர்களுக்கு பத்தாயிரம் பொன் பரிசளிப்பதாக பறை அறிவித்திருக்கிறாரே, தெரி யாதா"? என்ற அமணன் அறிவிப்பு, புலவர் பெரு மானுக்குச் சொல்லப்படுகிறது. "அப்படியா? குமணன் தலைக்கு விலையா?" என்று கேட்டு விட்டு குமணனைக் காண காட்டுக்குச் செல்கிறார். குமணன் காட்டில் நாடு துறந்த துறவியாக உலவிக் கொண்டிருக்கிறான். புலவரைப் பார்த்ததும் "வருக புலவரே" என்று வாய் மணக்க அழைக்கிறான். புலவர் அவனிடத்திலே தன்னுடைய வறுமை நிலையைச் சொல்கிறார். அப்பொழுது குமணன் "உங்கள் வறுமையைப் போக்க ஒரு வழி இருக் கிறது" என்று சொல்கிறான்.

"அந்த நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்;
இந்த நாள் வந்து நொந்து எனை அடைந்தீர்;
தலைதனைக் கொண்டு போய் தம்பி கைக்கொடுத்து
விலைதனைப் பெற்று உன் வறுமை நோய் களைவீர்"

28

"என் தலையைக் கொண்டு போய் என் தம்பி கையில் கொடுத்தால் பத்தாயிரம் பொன் பரிசு வழங்குவான். அதைப் பெற்றுக் கொண்டு உங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்கிறான். சொன்னவுடன் பதைத்துப் போன புலவர், குமணனை விட்டு நீங்கி வரும் வழியில் ஒரு வாழை மரத்தைக் கொண்டு தயாரித்து குமணன் தலையைப் போல உருவமாக்கி ரத்தம் ஒழுகுவதைப் போல செய்து, அமணனுடைய அவைக் களத்திற்கு அதைக் கொண்டு வருகிறான்.

அமணன் அமர்ந்திருக்கிறான். வாழைத் தண்டால் செய்யப்பட்ட குமணனுடைய தலையைக் கீழே போட்டு "இதோ பார் உன் அண்ணன் குமணனுடைய தலையைக் கொண்டு வந்து விட்டேன்" என்று தலையைக் கீழே போடுகிறார். ரத்தம் ஒழுகுகின்ற தலையைப் பார்த்ததும் அமணனுக்கு, தானாடாவிடினும் தன் தசை ஆடும் என்பதைப் போல உடல் பதறுகிறது. உள்ளம் குமுறுகிறது. "அய்யோ அண்ணா!" என்று கதறுகிறான். "அண்ணனையா கொன்று விட்டீர்?" என்று அழுகிறான்.

*

# 29 பனித்துளியில் பனை மரம்

கபிலர் காலை நேரத்தில் ஒரு புல்வெளியில் நிற்கிறார். அங்கு பனி பெய்திருப்பதன் காரணமாக ஒரு புல்லின் நுனியில் ஒரு பனித்துளி ஒட்டிக் கொண்டு இருக்கிறது. கபிலர் நிற்பதற்குப் பக்கத்

திலே ஒரு பனை மரம் இருக்கிறது. அந்தப் பனை மரத்தினுடைய முழு உருவமும் புல்லின் நுனியிலே அந்தப் பனித்துளியிலே பிரதிபலிக்கிறது. கபிலர் சொல்கிறார்: "இந்தப் பனை மரம் முழுவதும் எப்படி புல்லின் நுனியிலே இருக்கிற பனித்துளியில் பிரதி பலிக்கிறதோ, அதைப்போல உலகத்திலே இருக் கின்ற எல்லாக் கருத்துகளும் திருக்குறள் என்கிற அந்தப் பனித்துளியிலே பிரதிபலிக்கிறது" (பலத்த கைதட்டல்) என்று கபிலர் மிக அழகாக வர்ணிக் கிறார்.

*

## பாடுநர் போல... 30

கிள்ளி வளவன் என்ற மாமன்னனுக்கு உற்ற தோழர் நப்பசலையார் என்னும் புலவர். அவர் அந்தக் கிள்ளி வளவனைப் பற்றிப் பாடுகிறார்.

கிள்ளிவளவன் இறந்து விடுகிறான். அவன் எப்படி இறந்திருக்க முடியும்? என்று கேள்வி கேட்கிறார் புலவர். அவனை யாருமே கொல்ல முடியாது!

"பொலந்தார் மண்டமர்
கடக்குந் தானைத்
திண்தேர் வளவற்
கொண்ட கூற்றே"

அப்படிப்பட்ட மாமன்னன் உயிரை எடுத்துவிட்ட கூற்றுவன் - எமன் - எப்படி அவன் உயிரைப் பறித்திருக்க முடியும் என்று கேட்கிறார். ஏன் எடுக்க முடியாதாம்?

"செற்றன் றாயினும்
 செயிர்த்தன் றாயினும்
உற்றன் றாயினும்
 உய்வின்று மாதோ!"

எதிர்த்தோ, உறவாடியோ, சண்டையிட்டோ கிள்ளி வளவனுடைய உயிரை எமனால் பறிக்க முடியாது. பிறகு எப்படிப் பறித்திருப்பான்?

"பாடுநர் போலக்
 கை தொழு தேத்தி
இரந்தன் றாகல்
 வேண்டும்"

எமன் ஒரு கவிஞர் போல வேடம் போட்டுக் கொண்டு போய்க் கிள்ளிவளவனுடைய உயிரைத் 'தா' என்று கேட்டிருப்பான். கிள்ளிவளவன் கூற்று வனைப் புலவனெனக் கருதி தனது உயிரைக் கொடுத்திருப்பான் என்கிறார்.

அந்தக் காலத்தில் அரசர்கள், புலவர்கள் மீது எத்தகைய மதிப்பு வைத்திருந்தார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுதான் நப்பசலையாரின் இந்தக் கவிதையாகும்.

*

# 31 இராமனைப் பற்றி இராமன்

**வா**லி வதைப் படலத்தைப் பொறுத்தவரையில் யாருமே இராமனுடைய போக்கை ஒத்துக் கொண் டவர்கள் அல்ல; இவைகள் எல்லாம் பாத்திரங்கள்

என்ற உணர்வோடுதான் நாம் பார்க்கவேண்டுமே யல்லாமல், வேறு கற்பனை செய்து கொண்டு பார்ப்பது முறையல்ல; நல்லதல்ல. அந்தப் பாத்திரப் படைப்பில் வாலி வதைப் படலத்தில் இராமன் மறைந்திருந்து தாக்கியது குற்றம் என்பதை நானோ மற்றவர்களோ சொல்வதை விட, இராமனே சொல்கிறான். எங்கே? வாலி வதைப் படலத்திலா? அல்ல. இராவணன் மாண்டு விட்ட பிறகு சொல்கின்றான். கம்பராமாயணம் படித்தவர்கள் "என்ன புதிய கதையாக இருக்கிறதே! அப்படிச் சொன்னதாகத் தெரியவில்லையே" என்று கேட்கக் கூடும்.



போரிலே இராவணன் மாண்டு கிடக்கிறான். அப்போது இராவணனை அவனுடைய இளவல் விபீடணனோடு வந்து இராமன் பார்க்கிறான். பார்க்கும்போது இராவணனுடைய முதுகில் ஒரு தழும்பு இருக்கிறது. அப்போது இராமன் சொல்லு கின்றான்: "அடடா, முதுகிலே தழும்பு ஏற்றவனையா நான் கொன்றேன்? முதுகிலே காயம் பட்டவனை; தழும்பு பட்டவனைக் கொல்வது வீரனுக்கு அழ கல்லவே? முதுகிலே தழும்பு கொண்டவனையா நான் கொன்றேன்?" என்று வருத்தப்படுகிறான்.

"மாண்டொழிந்(து) உலகில் நிற்கும்
வயங்கிசை முயங்க மாட்டா (து)
ஊண் தொழில் உகந்து தெவ்வர்
முறுவல் என் புகழை உண்ணப்
பூண் தொழில் உடைய மார்பா?
போர்ப்புறங் கொடுத்தோர் போன்ற
ஆண் தொழி லோனிற் பெற்ற
வெற்றியும் அபத்தம் என்றான்."

31

அப்பொழுது விபீடணன் சொல்லுகின்றான் - அதாவது விபீடணனைக் கம்பர் சொல்ல வைக் கின்றார்: “அது புறமுதுகு காட்டியதால் ஏற்பட்ட தழும்பல்ல இராமா? ஏற்கனவே ஒருமுறை என் னுடைய அண்ணன் இராவணன் ஒரு யானை யோடு போரிட்ட போது அந்த யானையினுடைய தந்தங்கள் அவனுடைய மார்பிலே புகுந்து ஊடுருவி முதுகுக்கு மேலே வெளிப்பட்டு விட்டன. அதனால் ஏற்பட்ட தழும்பு தான் அது” என்று.

“நாடுள தனையும் ஓடி
நண்ணலார்க் காண்கிலாமற்
பீடுள குன்றம் போலும்
பெருந்திசை எல்லை யானைக்
கோடுள தனையும் புக்குக்
கொடும் புறத் தழுந்து புண்ணின்
பாடுளது அன்றித் தெவ்வர்
படைக்கலம் பட்(டு)என் செய்யும்?”

“அப்பனை அனைத்தும் மார்புக்(கு)
அணி எனக் கிடந்த; வீரக்
கைப்பணை முழங்க மேனாள்
அமரிடைக் கிடைத்த காலன்
துப்பணை வயிர வாளி
விசையிலும், காலின் தோன்றல்
வப்பணை குத்தினாலும்,
வெரி நிலடப் போய அன்றே”

என்று, இராவணனுடைய வீரத்தை வெளிப்படுத்து கின்றான் என்று கம்பர் சொல்லுகின்றார். ஆகவே இராமனே பயப்படுகிறான்.

"முதுகிலே தழும்பேற்ற ஒருவனைக் கொன்று விட்டோமே, பழிவந்து சேருமே" என்று! வீரத்திற்கு இலக்கணம் வகுக்கிற இராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றது பற்றி எவ்வளவு நாள் மனச் சங்கடப்பட்டிருப்பான் என்பதைக் கம்பருக்காக வாதாடுகின்றவர்கள், இராமனுக்காக வாதாடுகின்ற வர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன்.

நான் இதிலும் இராமன் சார்பாகத்தான் வாதாடு கிறேன். ஏனென்றால் அவனுக்கு அவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது - முதுகிலே தழும்பேற்றவனைக் கொன்று விட்டோமே; நம்முடைய வீரம் நிலைகுலைந்து விட்டதே! பாழாகி விட்டதே என்று! அதே இராமன் வாலியை மறைந்திருந்து கொன்றோமே என்ற குற்றத்திற்காக எவ்வளவு வருந்தி இருப்பான் என் பதையும் எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும்.

*

# 32 மானும் பெருமானும்

காட்டில் நபிகள் நாயகம் நடந்து வருகிறார். ஒரு மான், வேடனால் துரத்தப்பட்டு ஓடி வருகிறது. அந்த மான் எப்படி துரத்தப்பட்டது என்றால், மான்கள் நிரம்பிய ஒரு கூட்டத்தில் ஆண் மான் ஒன்று, பெண் மான் ஒன்று மூன்று நாளே நிறைந்த குட்டி மான் ஒன்று. வேடன் அந்த மூன்று மான்களையும் பிடிக்க துரத்துகிறான். கூட்டத்தோடு கூட்டமாக ஆண் மானும், குட்டி மானும் போய்விட பெண் மான்

தனியாக சிக்கிக் கொள்கிறது. அதைத் துரத்துகிறான். பிடித்து விடுகிறான். பிடித்து இழுத்து வரும்போது நபிகள் நாயகம் எதிரே வருகிறார். பெண் மான் வேடனைப் பார்த்து 'என்னை விட்டு விடு' என்று கெஞ்சுகிறது. "என்னைப் பிரிந்து ஆண் மான் ஆறாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும். அது மாத்திர மல்ல. மூன்று நாள் கூட நிரம்பாத குட்டி மானுக்கு நான் பால் கொடுக்க வேண்டும். வேடனே என்னை விட்டுவிடு" என்று கெஞ்சுகிறது. "விட முடியாது" என்று வேடன் மறுக்கிறான். நபிகள் நாயகம் குறுக்கிடுகிறார். "உனக்கு இரக்கமே இல்லையா அப்பா? குட்டிக்கு பால் கொடுக்க வேண்டுமென்று அந்த மான் கெஞ்சுகிறதே அதை விட்டுவிடு" என்கிறார். வேடன் முடியாது என்கிறான்.

32

பிறகு சொல்கிறார் "அந்த மானை விடு. அது போய் மீண்டும் உன்னிடம் திரும்பி வந்து விடும். குட்டிக்குப் பால் கொடுத்து விட்டு வந்து விடும்" என்கிறார். வேடன் நம்ப மறுக்கிறான். "நீ நம்பவில்லை என்றால் அந்த மான் திரும்ப உன்னிடம் வருகின்ற வரை அதற்குப் பிணையாக - ஜாமீனாக நான் உன் பக்கத்திலே இருக்கிறேன்" என்று நபிகள் நாயகம் சொல்கிறார்.

அதற்குப் பிறகு வேடன் அந்த மானை "நீ குட்டிக்குப் பால் கொடுத்து விட்டு உடனே வந்து விடவேண்டுமென்று நிபந்தனை விதித்து அனுப்பு கிறான். அந்தப் பெண் மான் தனது குட்டியைத் தேடி ஓடுகிறது. ஓடுகின்ற நேரத்திலேயே குட்டிக்குப் பால் கொடுக்கப் போகிறோம் என்ற பாச உணர்வால் வழியெல்லாம் பால் பொங்கி வழிகின்றது. அது

வெண் நிலவின் ஒளியைப் போல் இருக்கின்றது என்று உமறுப்புலவர் வர்ணிக்கிறார்.

குட்டிக்குப் பால் கொடுத்து விட்டு பெண் மான் ஆண் மானிடம் விடைபெறுகிறது. "நான் மீண்டும் வேடனிடம் செல்ல வேண்டும். எனக்காக நபிகள் நாயகம் அங்கே ஜாமீன் இருக்கிறார்'' என்று கூறுகிறது. மற்ற மான்கள் எல்லாம் செல்ல வேண்டாமென்று தடுக்கின்றன. அப்பொழுது அந்தப் பெண் மான் "நான் அளித்த உறுதிமொழியைக் காப்பாற்றாமல் உயிரோடு வாழ்வதைவிட ஒரு புலியால் அடிக்கப்பட்டு செத்துவிடுவதே மேல்" என்று கூறுகின்றது.

அந்த அளவிற்கு நாணயமான மான். இந்த மான், சீறாப் புராணத்தில் உமறுப்புலவர் சுட்டிக் காட்டுகின்ற மான். அது வேடனிடம் திரும்பி வருகின்றது. வேடன் அந்த மானின் நாணயத்தைக் கண்டு 'நீ உயிரோடு இரு' என்று சொல்லி வாழ்த்தி அனுப்புகிறான்; நபிகள் நாயகத்தையும் வணங்கு கிறான் என்று அந்தப் புராணத்தின் அந்தக் கட்டம் முடிகிறது.

*

# எழுச்சிக்கு அடையாளம் 33

அபிமன்யூ பற்றிய கதையை பாரதத்திலே படித்திருக்கிறோம். அவன் இளைஞன், மணமான இளைஞன். அந்த இளைஞன் பாரதப் போரில் மாண்டு விட்டான் என்றாலும்கூட, அவனுடைய

வீரம் மறைந்து விடவில்லை. காரணம்-யாராலும் பிளக்க முடியாத சக்கர வியூகத்தைப் பிளந்தான். அர்ச்சுனனால்கூட பிளக்க முடியாத அந்த சக்கர வியூகத்தை அபிமன்யூ பிளந்தான். எனவே பாரத யுத்தத்திலேயே பீமனுடைய வீரம் பாராட்டப்பட் டாலும், பார்த்திபனுடைய வீரம் பாராட்டப்பட்டாலும், கர்ணனுடைய வீரம் பாராட்டப்பட்டாலும், அஸ்வத் தாமனுடைய வீரம் பாராட்டப்பட்டாலும் அனை வரையும் விட ஒரு படி மேலாக அந்த இளைஞன் அபிமன்யூவின் வீரம் அதிகம் பாராட்டப்படுகிறது. கரம் இழந்தான், கரத்தை இழந்த பிறகு வாளை வாயிலே கவ்விக் கொண்டு போரிட்டான். பிறகு கால்கள் துண்டிக்கப்பட்டன. முண்டமாக உருண்டு களத்திலே போரிட்டான். இறுதியாக ஜெயத்ரதன் என்ற சூழ்ச்சிக்காரன் பின்னால் இருந்து அவனைக் கொன்றான் என்பது கதை. ஆக இறுதி வரையில் வீரனாக இருந்து செத்தான் அபிமன்யூ. இது இளைஞர்களுடைய எழுச்சி, புராண காலத்திலே எப்படி இருந்தது என்பதற்கு அடையாளம்.

*

# 34 தலையும் நுனியும்

ஒருமுறை துரோணர், தன்னிடத்திலே பயிலு கின்ற மாணவர்களையெல்லாம் அழைத்து ஒரு மரத்தைக் காட்டி “அந்த மரத்திலே ஒரு கிளி அமர்ந் திருக்கிறது. அந்தக் கிளியை நீங்கள் குறி பார்த்து அம்பை எய்தி அதனுடைய கழுத்தை அறுக்க வேண்டும்” என்று சொல்லி துரியோதனனையும்

மற்ற மாணவர்களையும் அழைத்து மரத்தையும் கிளியையும் காட்டி “என்ன தெரிகின்றது” என்று ஒவ்வொருவராக கேட்டார். அத்தனை பேரும், “மரம் தெரிகிறது, கிளை தெரிகிறது” என்று சொன்னார்கள். அவர்களையெல்லாம் சரியில்லை என்று ஒதுக்கி விட்டார். இளைஞன் அர்ச்சுனனை அழைத்து, “உனக்கு என்ன தெரிகிறது” என்று கேட்டார். “எனக்கு எதுவுமே தெரியவில்லை. அம்பின் நுனி யும், கிளியின் தலையும் தான் தெரிகிறது” என்று சொன்னான். எந்தக் கிளி வீழ்த்தப்பட வேண்டும் என்று காண்டீபன் கருதினானோ, அந்தக் கிளியின் தலையும் அம்பின் நுனியும் தான் அவனுக்குத் தெரிந்தது. எனவே “நீ தான் குறி பார்ப்பதில் வல்லவன், வெற்றி பெறக் கூடியவன்” என்று துரோணர் தட்டிக் கொடுத்தார் என்று கதை கூறு கின்றது.

*

## துும் பம் தீம் தோம்

35

அழகழகான கவிதைகளையெல்லாம் - புரட்சிக் கவிஞர் இயற்றிய கவிதைகளையெல்லாம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் இங்கே பாடிக் காட்டினார். அதன் வாயிலாக ஊட்டப்படுகின்ற உணர்ச்சிகளையெல்லாம் இங்கே அள்ளித் தெளித் தார்கள். அவைகளையெல்லாம் உண்டு மகிழ்ந்து இங்கிருந்து சென்றோம், என்று இல்லாமல் அவைகளையெல்லாம் நம்முடைய உதிரத்தோடு, உணர்வோடு ஒன்றிக் கலக்கச் செய்து, தமிழினம்

35

தலை தாழா இனம் என்ற நிலையை உருவாக்கு வதற்கு பாடுபட்டாக வேண்டும்; பணியாற்றிட வேண்டும்.

இந்தத் தமிழில் எத்தனையோ புலவர் பெரு மக்கள் விளையாடியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். பல்வேறு நிகழ்ச்சிகளிலே எடுத்துக் காட்டியிருக்கிறேன். புலவர்களுக்குள்ளே ஏற்படுகின்ற மொழிச் சண்டை, மொழியினால் ஏற்படுகிற விவாதத்தால் தமிழுக்கு எவ்வளவோ நன்மைகள் கிடைத்திருக்கின்றன.

புகழேந்தியும், ஒட்டக் கூத்தனும் சண்டை போட்டுக் கொண்டதாக ஒரு கற்பனை. அதிலே புகழேந்தி - ஒட்டக் கூத்தன் இருவருக்கும் ஏற்பட்ட சண்டை கொலு மண்டபத்திலே நடைபெறுவதாக கற்பனை.

"மல்லிகையே! வெண்சங்காம் வண்டுத..."

என்றான் புகழேந்தி. ஒட்டக்கூத்தன் கேட்டான். "அது எப்படி முடியும்? மல்லிகை மலரிலே வண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்து மல்லிகையை வெண்சங்காக ஆக்கிக் கொண்டு வண்டு அதை ஊதுவதாகச் சொல்லுகிறீர்-சங்கை பின்புறமாக ஊது வார்களா? முன்புறமாக ஊதுவார்களா?" என்றான். அப்போது புகழேந்தி, "ஏற்கனவே மது உண்ட மயக்கத்திலே வண்டு இருக்கிற காரணத்தால் முன் புறம் எது? பின்புறம் எது? என்று தெரியாமல் ஊதுகிறது" என்று சொல்லுகிறான்.

அண்மைக் காலத்திலே ஒரு பெரிய நாடக ஆசிரியர் சங்கரதாஸ் சுவாமிகள். அவரைப் பற்றிய

வரலாற்றுக் குறிப்புகள் சிலவற்றை நான் படித்திருக் கிறேன். பல புராணங்களையெல்லாம் அவருடைய காலத்திற்கேற்ற நாடக நடையிலே தீட்டித் தந்த பெரும் நாடகப் புலவர் சங்கரதாஸ் சுவாமிகள். அதிலே அபிமன்னன் சுந்தரி மாலை என்பது அவர் எழுதிய நாடகங்களிலே ஒன்று. அது அவருடைய குழுவினர் நாடெங்கும் நடித்த நாடகங்களில் ஒன்று.

அதிலே அபிமன்யுவிற்குத்தான், தான் மனைவி யாகப் போகிறோம் என்று சுந்தரி எண்ணிக் கொண் டிருக்கும்போது, "அபிமன்யுவிற்கு அல்ல, இலக்கணன் என்பவனுக்குத் தான் உன்னை மணம் முடிக்கப் போகிறார்கள்" என்ற செய்தி வருகிறது. அந்த செய்தியை கேள்விப்பட்ட சுந்தரி, அலறித் துடிக் கிறாள். அதைத் தொடர்ந்து மற்றொரு செய்தி வரு கிறது. "இல்லை, இல்லை, அபிமன்யூதான் உன் னைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறான், இலக்கணன் துரத்தப்பட்டு விட்டான்" என்ற செய்தியும் வருகிறது.

35

அப்போது சொல்கிறாள் - அந்த மணவிழா மண்டபத்தில் ஒலித்துக் கொண்டிருந்த இசைக் கருவிகளுடைய முழக்கத்தை ஒப்பிட்டுச் சொல்கி றாள். "இதுவரையிலே இங்கே பல்வேறு இசைகள் முழங்கிக் கொண்டிருந்தன. அந்த இசை எனக்குத் துன்பமாக இருந்தது. அபிமன்யூதான் தன்னுடைய கணவனாக வருகிறான் என்று கேள்விப்பட்டதும் அந்த சோக இசையெல்லாம் இப்போது மாறிவிட்டது" என்கிறாள்.

"எப்படி" என்று தோழி கேட்கிறாள்.

அவள் சொல்லுகிறாள் : "துந்துபி 'தும் தும்' என்று முழங்குகிறது. சங்கம் 'பம் பம்' என்று முழங்குகிறது. தாளங்கள் 'தீம் தீம்' என்று முழங்குகின்றன. எல்லாம் சேர்ந்து தும் பம் தீம் தோம் - 'துன்பம் தீர்ந்தோம்' என்று முழங்குகிறது" என்று சங்கரதாஸ் சுவாமிகள் 'அபிமன்னன் சுந்தரி மாலை' என்ற அவருடைய நாடகத்திலே எழுதிய உரையாடல் இது. (இசைக் கருவிகளை, அதனுடைய முழக்கங்களை வைத்தே துன்பம் தீர்ந்தோம் - ('தும்', 'தும்', 'பம்', 'பம்', 'தீம்..... தீம்' ) எல்லாம் சேர்ந்து தோம், தோம், துன்பம் தீர்ந்தோம். இப்படி தமிழனுடைய இசையிலேகூட அதன் புகழைப் பரப்புகிற புலவர் பெருமக்கள் வாழ்ந்த நாடு இது.

*

# 36 நல்வழியும் நல்ல வழியும்

நல் வழியிலே ஒரு பாட்டு உண்டு

"நெட்டிருப்புப் பாறைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும்" என்பதாகும்.

இதற்கு என்ன பொருள் என்றால், பாறையை உடைக்க கடப்பாறையை பயன்படுத்துகிறோம். பாறையை உடைக்க கடப்பாறையை பயன்படுத்தி னாலும்கூட இரண்டு மூன்று தடவை அந்தக் கடப்பாறையின் கூர் மழுங்குகிறது. தீட்டிக் கொண்டு கடப்பாறையால் பாறையை உடைக்கிறோம். இப்படி நல்ல நீளமான, அழுத்தமான இரும்பால் செய்யப்

பட்ட கடப்பாறை கூட மழுங்குகிற அளவுக்கு பாறை இருக்கிறது. அப்படித்தான் பாறையை உடைக்க வேண்டியிருக்கிறது.

ஆனால் அதே பாறையில் ஒரு சின்னச் செடியினுடைய வேர் இருக்கிறதே அது இண்டு இடுக்கெல்லாம் புகுந்து சந்து பொந்தெல்லாம் புகுந்து அந்த பாறைக்குள்ளே முளைத்து வேர்விட்டு மரமாகி பாறையை பிளந்து விடுகிறது. எனவே பாறையை பிளக்க கடப்பாறையை பயன்படுத்துவதா? அல்லது அந்த பசுமரத்தின் வேரைப் போல் பக்குவமாக பாறையை உடைப்பதா? என்ற அந்த கலையை அண்ணாவிடத்திலே கற்றவன் என்ற முறையில் என்னுடைய தம்பிமார்களுக்கும் சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*

# நாக்குத் தமிழ் மணக்கும் 37

காளமேகப் புலவர் கேள்விப்பட்டிருப்பாய்! சிலேடையாகப் பாடல் புனைவதில் சிறந்த மேதை! அவர் ஒரு சமயம் யாத்திரை புறப்பட்டு பல ஊர்களையும் கடந்து வந்தபோது நாகைக்கு வந்தாராம்! புலவருக்கு நல்ல பசி! எங்கேயாவது ஒரு உணவுக்கடையில் சோறு வாங்கி சாப்பிடலாம் என்ற நினைவில், அங்கே கோயிலருகே கோலி விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களைப் பார்த்து, "தம்பி சோறு எங்கே விற்கும்?" என்று

கேட்டிருக்கிறார். உடனே ஒரு குறும்புக்கார இளைஞன் "சோறு தொண்டையிலே விக்கும்" என்று கூறி சிரித்திருக்கிறான். சினம் கொண்ட காள மேகப் புலவர் அந்த இளைஞர்களை சபிப்பதற்காக ஒரு கரித்துண்டை எடுத்து சுவரில் எழுதினார்.

"பாக்கடிக்கும் பாலகர்க்கு நாக்கு..."

என எழுதி முடிப்பதற்குள் கோயில் மணி அடிக்கவே, காளமேகம் கோயிலுக்குச் செல்லும் பரபரப்பில் எழுதியதை சுவரில் அப்படியே விட்டு விட்டுப் போய் விட்டார். கோயிலில் உணவு வாங்கி சாப்பிட்டு விட்டு வெளியில் வந்து, அந்த இளைஞர் களுக்கு தான் இடப்போகும் சாபத்தைப் பூர்த்தி செய்ய, மீண்டும் கரித்துண்டை எடுத்து சுவர் அருகே சென்றார். ஆனால் அவருக்கு முன்பே அந்த இளைஞர்கள் அந்த வாசகத்தைப் பூர்த்தி செய் திருந்தார்கள்.

37

'பாக்கடிக்கும் பாலகர்க்கு
நாக்குத் தமிழ் மணக்கும் நன் நாகை"

என்பதாக!

அந்த இளைஞர்களைத் தண்டிக்க நினைத்த காளமேகமே அவர்களின் தமிழ்ப்புலமை கண்டு பூரித்துப் போனார் என்றால், அந்த நன் நாகையில் நாக்குத் தமிழ் மணக்கும் நல் இளைஞர்கள், பல பகுதிகளிலிருந்தும் அண்ணா சுடர்களை ஏந்தி மேடைக்கு வந்த போதும், கழகத்தின் பால் கொண்ட பற்று பாசத்தைக் கண்ணொளியாய் உணர்த்தி உற்சாக மேலீட்டால் ஒலி முழக்கமிட்ட போதும்,

என்னை நான் மறந்தேன் என்பது வியப்பில்லை அல்லவா!

*

# நீதி தேவதையே!

38

ஒரு வல்லூறு, ஒரு புறாவை துரத்தியதாம். புறா அபயம் கோரி அங்குமிங்கும் பறந்தோடி கடைசி யாக சிபி சக்ரவர்த்தி கையில் வந்து விழுந்தது. அண்ணாந்து பார்த்தார். வல்லூறு வந்தது தெரிந்தது.

அந்த வல்லூறைப் பார்த்து "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டார் சிபி. எனக்கு அந்தப் புறா வேண்டும் என்றது. "புறா என்னிடம் அபயம் கேட்டு வந்திருக்கிறது. எனவே அதைத் தர இயலாது. வேண்டுமானால் அதற்குப் பதிலாக என்னுடைய சதையைத் தருகிறேன்" என்றார் சிபி சக்கரவர்த்தி. "சரி கொடு" என்றதாம் வல்லூறு. அந்த புறாவை ஒரு தராசு தட்டில் வைத்து தன்னுடைய சதையை அறுத்து இன்னொரு தட்டில் வைக்கிறார் சிபி. ஆனால் புறா இருக்கும் தட்டு தாழ்ந்து கொண்டே இருக்கிறது. பிறகு சிபி தன்னுடைய உடம்பு முழு வதையும் அறுத்து வைத்துப் பார்த்தும் முடியாமல் அவரே ஏறி தராசில் அமர்ந்து "என்னையே எடுத்துக் கொள்" என்று வல்லூறுக்குச் சொன்னார், என்பது சிபி சக்ரவர்த்தியின் கதை. அதை வைத்து அப்துல் ரகுமான் ஒரு கவிதை படைத்திருக்கிறார்.

"நீதி தேவதையே
உன் தராசுத் தட்டுகளைக்
கொஞ்சம் கண்திறந்து பார்.
அங்கே-
புறாவின் மாமிசத்தை
சிபிகள் உண்ண
ஆரம்பித்து விட்டார்கள்"

இப்படிப்பட்ட தத்துவங்களை, அழகான கற்பனைகளை, நாட்டு நிலையை, மனித சமுதாயத்தினுடைய சூழலை தன்னுடைய இயல் தமிழால் வடித்துத் தந்த 'கவிக்கோ. அப்துல் ரகுமானுக்கு நாம் வழங்கிய இந்த விருதின் மூலமாக நாம் பெருமைப் படுகிறோம்.

*

# 39 நன்றி சொல்லும் நேரம்

ஒரு உழவன் தன்னுடைய வயலுக்குத் தண்ணீர் இல்லாமல், பயிர் செய்ய முடியாமல் வானத்தைப் பார்த்து ஏங்குகிறான். வானத்திலே மேகம் இல்லை. மழையும் இல்லை. மழை வராதா என்று மனக்கவலையோடு படுத்துத் தூங்குகிறான். மறுநாள் காலையிலே மழை பொழிகிறது. வயலுக்கு ஓடி வருகிறான். உழுகிறான். பயிர் செய்கிறான். அறுவடை நடத்துகிறான். உழுது பயிரிட்டு அறுவடை நடத்தி தானியங்களை வீட்டில் கொண்டு வந்து குவிக்கின்ற வரையில் மேகம் அல்லவா இந்த மழையை தந்தது என்று எண்ண

41619
894.8113 ஆ
வி௱ா



தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

அவனுக்கு நேரம் இல்லை. இவ்வளவையும் செய்து முடித்து விட்டு, ஆகா மேகத்திற்கு நன்றி கூற மறந்து விட்டோமே என்று தெருவிலே வந்து நின்று ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கிறான். மேகம் தன்னை மழையாகக் கரைத்துக் கொண்டு எப்பொழுதோ மறைந்து போய் விட்டது. அவன் நன்றி கூறுகிற நேரத்தில் மேகம் ஆகாயத்தில் இல்லை.

*

## பந்தலிலே பாகற்காய் 40

துக்கத்துக்கு போன இடத்தில் ஒப்பாரி வைக்க வந்தவள் :

"பந்தலிலே பாகற்காய்
பந்தலிலே பாகற்காய்
தொங்குதடி அக்காடி!"

என்றுபாடி அழ,

இன்னொருத்தி பாடினாளாம்-

"அதைப் போகும் போது பார்த்துக்கலாம்
போகும் போது பார்த்துக்கலாம்" என்று

உடனே வீட்டு சொந்தக்காரி

"ஐயோ, அதை விதைக்கல்லோ விட்டிருக்கேன்
விதைக்கல்லோ விட்டிருக்கிறேன்" என்று

பாடினாளாம்.

*

கலைஞர் சொன்ன கதைகள்
வெவ்வேறு கால கட்டங்களில்
பல்வேறு சூழ்நிலைகளில்
எடுத்துச்சொன்ன,
எழுதிக் காட்டிய
கதைகளின் அணிவகுப்பு
பேசும் கலை வளர்ப்போம்
குறளோவியம்
நெஞ்சுக்கு நீதி
அனைய நூல்களில் கண்ட,
ஆற்றிய உரையில் பிறந்த,
அன்பு உடன் பிறப்புக் கடிதங்களில் பெற்ற,
குங்குமம் கேள்வி-பதிலில் கிடைத்த,
முரசொலி பொங்கல் மலரில் மின்னிய,
கதைகளைத் திரட்டியிருக்கிறோம்.
பகுப்புத் தொகுப்பின் குறிப்பு :
பழங்கதைகள்,
அயல் மொழிக் கதைகள்,
இலக்கியக் கதைகள்,
இவை - பாவேந்தர் சொற்களில்
கனியிடை ஏறிய சுளையாய் - முற்றல்
கழையிடை ஏறிய சாறாய்
பனிமலர் ஏறிய தேனாய் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையாய்
நனிபசு பொழியும் பாலாய் - தென்னை
நல்கிய குளிரிள நீராய்
நெஞ்சில் இனிக்கும்
நினைவில் நிலைக்கும்
நம்புகிறோம்
- பதிப்பகத்தார்

